கர்வமுற்ற அரசன்,

அல்லது

தெய்வீக சோதனை.

கோ. தியாகராஜ அய்யர்

எழுதியது.

N. L. IYER,

Book-Seller and Publisher,

Railway Road, Tanjore.

Price] **1931.** *[2 Annas.*

முருகன் துணை

கர்வமுற்ற அரசன்

அல்லது

தெய்வீக சோதனை.

மாலை.

முகவுரை.

அங்கிங்கெனாதபடி—யெங்கும் பிரகாசமதாய்
அகிலவுலகதனை—ஆட்டிவைக்கு மருட்சோதி
அருட்சோதிதன்னில்—அணுவளவுஞ் சிந்தையற்று
அவனடைந்த செல்வமும்—ஆள்வலியுந் தோள்வலியும்

அனவரதஞ் சதமென்று—அகம்பாவங் கொண்டவொரு
அரசன் கதிதானும்—யாதாயிற்றொருநாளில்
என்றதொரு கதைதன்னை—எனதினிய சமதர்ம
(தஞ்சை) ஆத்மானந்த நிலையத்து—அழகியதோர் மாலையதாய்

தமியேன் எடுத்தோதத்—தனிக்கடவுள் கணபதியாம்
வாக்தேவி சரஸ்வதியாம்—வன்மலரோன் பாரியையாம்
பகையறுக்கும் வெற்றிவேல்—படைத்த திருவேலவனும்
மாம்பழவாய்க்குழலிசையை—மாண்புமிகக்கொண்டு பெரும்

படமதுமேல் நடஞ்செய்யும்—பாதம்பெற்ற கேசவனும்
செல்வமெல்லாந் தந்தருளும்—செல்வத் திருமகளாம்
அஞ்ஞானம் போக்குமொரு—அகண்ட திருஅரனாம்
சொல்லுக்கடங்காத—சூரத்வமிகப் படைத்த.

ஊழிக்கூத் தாடிடுவாள்—உலகளந்த நாயகியாம்
இத்துணைத் தெய்வமுதல்—இன்னும் பல தெய்வங்கள்
பதமலர்கள் தம்மைப்—பரிவுடனே யான்றேடி
என்னிதயத் திருத்தியிங்கே—இயம்பிடுவேன் கேண்மின்.

குற்றமதுதான் பார்க்கிற்—சுற்றஞ் சற்றுமில்லையென்று
குணம்படைத்தோர் கூறிவிட்டார்—கோதுகள் நோக்காதீர்
கருத்ததனை யறியுங்கள்—கதிதனையும் ஒருங்கள்
(கடவுள்) உணர்வதனை யடையுங்கள்—உயர்நிலையி லேறுங்கள்.

முடிசார்ந்த மன்னர் முதல்—மற்றுமுள்ள எவ்வெவரும் (முடி
பிடிசாம்பராவரென்ற—பெற்றியதை நோக்குங்கள். [விற்)
தெய்வமிகழாதீர்—தேசத்தைப் பழிக்காதீர்.
சாண்வயிறு வளர்க்க பெருஞ்—சழக்குகள் செய்யாதீர்.

சாதிமதம் பாராதீர்—தனிப்பூசல் செய்யாதீர்.
உண்மையொருபொருளை—ஒருகணமும் மறவாதீர்.

* * * *

நூல்.

அரசன் வரலாறும் அவன் பெயரும்.

தேசமொன்றுந்தேசமொன்றும்-பண்டைபெருந்தேசமொன்றும்
தேசத்தை யாண்டுவந்தான்—ஜெயம்பெற்றவோரரசன்.
அரசனவனிளவயதில்—அரிய தவிசேறியவன்
குணவதியாங் கோதைக்குங்—குறிதாலி கட்டியவன்.

பணவலியும் படைவலியும்—பார்புகழப் படைத்தவன்காண்
முன்செய் தவப்பயனென்றே—முழுமூடனுணரான்காண்
தானெனுமாணவத்துடனே—தனியரசு செலுத்தினனால்
அவனியுள்ளோரவன் நாமம்—"அகம்பாவன்" எனக்குறித்தார்.

அகம்பாவ அரசனவன்—ஆண்டுவந்த ஆட்சியதன்
போக்கதையும் புகல்கின்றேன்—புந்தியுள்ளோர் சிந்தைகொள்க.

*　　*　　*　　*

ஆட்சிமுறைதனில்—பெண்மக்கள் நிலை.

சத்தியின்றேல் சிவமில்லை—சிவமின்றேல் சத்தியில்லை
என்ற பெருந் தத்துவத்தை—இயலறிந்த அயனவரும்
அன்றுலகம் படைக்கையிலே—அணிவகுத்தாரிரு வியக்தி.
ஆணென்றும் பெண்ணென்றும்—அவ்வியக்திகளைக் கூறிடுவர்.

பின்னுமொரு சத்திதன்னை—பிறக்கவைத்தாரிவரிடையே.
அதற்குத் திருநாமம்—அழகியதோர் "காதல்" என்பர்.
காதலியற் கயிற்றூற்—கட்டுண்ட இருபாலார்
ஞாலத்தில் வாழ்க்கைதனை—நலமாய் நடத்திடவே

தோன்றிநிற்கு மங்குமந்த—துங்கமிகு பிரேமையுந்தான்.
பிரேமையது பொங்கியெழ—பெருநிலைதான் வந்துதிக்கும்.
(இதை) கற்றறிந்த ஞானிகளும்—கற்புநிலை யென்றுரைப்பர்.
அரியதுவோர் கற்புநிலை—ஆங்கதுமே நிலைத்துநிற்க!

உதித்திடுமே ஓர் எண்ணம்—உயர்ந்ததிருக்கடவுளுள்ளம்
உயிரும் கடவுளுடன்—உயருசலாடையிலே　　[வரோ?
பிறிதொன்றைத்தானுமந்த-பெற்றவர்கள் (கடவுள்நிலை) நாடு
வாழ்க்கை முடிவிதுகாண்—இவ்வாழ்க்கைக் கடிப்படையாய்

இருபாலர் தம்மிலிந்த—இயற்வழக்கம் பெருகிவர
அயன்வகுத்தானங்கதனை—ஆண்டவன்றன் ஆக்கினையில்
உயர்பொருளை நாடியிங்கே—உயிர்கள்வழிநடக்கையிலே [கட்கு
உரிமை யெவை அவை பொதுவாம்—உற்ற (உயிர்கள்) திருதேகி

சரிபாதி ஆணுரிமை—பெண்ணுக்குத்தானுமுண்டு.
பெண்ணுரிமை தனிற்பாதி—புருடருக்குத் தானுமுண்டு
ஏழைமக்களுரிமையதில்—எழிலரசர் தங்கட்கும்
அரசரவருரிமையதில்—அவ்வேழை மக்கட்கும்

பங்குண்டு! பங்குண்டு!—பண்பாகக் கண்டிடலாம்.
ஒருவருரிமையை மற்—ெறாருவ ரவர்வஞ்சித்தால்
வஞ்சிக்கும் வஞ்சகரை—வான்பொருளுந் தண்டிக்கும்
இவ்வுண்மை தனையுணரான்—இறுமாந்த அரசனவன்

எழிலரசி உரிமையையங்—கேய்த்துமவன் மறுத்தனன்காண்.
கொற்றவன்றன் திருத்தவிசில்—கொலு வீற்றிருக்கையிலே
கொற்றவட்கு மத்தவிசில்—குறித்ததொரு பங்குண்டு
பண்டைமுறையிதுகாண்!—பண்பாளர் கண்டமுறை

அறிஞரறிந்தமுறை—அறக்கடவுளறைந்தமுறை.
இன்றுமதுவுள்ளமுறை—என்றென்றும் வாழுமுறை
முறைகளிவையுணரான்காண்—முழுமூட ஏந்தலவன்
தவிசதனின்படிக்கட்டில்—தன்பாதந் தங்கிநிற்கும்

இடத்திலவனமைத்தனன்காண்—இருக்கைமற்றுமரசிக்கு.
அநியாயம்! அநியாயம்!—ஆணரசன் பெண்ணரசி
உரிமையதை ஒளித்திட்டான்—உலகினில் பேரநியாயம்
பட்டத்தரசியவள்—பதிவிரதை தன்கதியும்

இந்தவிதமானால்—ஏனைப்பெண்கள் தம்கதியும்
எந்தவிதமிருக்கும்—ஏ! சற்றே யோசியுங்கள்.
அரசனகம்பாவம்—அலைகடந்து மோதுதன்றோ.

* * * *

சிற்றரசர்தம் நிலை.

கொற்றவன்றனாட்சியதில்—சிற்றரசர் மெத்தவுண்டு.
உதடசைத்தால் மன்னவனும்—உயிர்நிலையே கலங்கிடுவார்.
(இவர்கள்) செலுத்துந்திரையதிலே—சிறுகாசும் விட்டுவிடான்.
காகக்கழுத்தோலை—கண்டவுடன் வந்திடணும்.

உற்றதொரு யோசனையை—உடனுடனே முடித்துவைக்க
கங்கணமுங் கட்டவேணுங்—காரியத்தைக்கூட்டவேணும்.
அரசனவனன்பு—அகன்றுவிடப்போகுமென்று
இராப்பகலாய்க் கண்விழிப்பார்—எழில்பெற்ற சீமான்கள்.

உண்மைநிலையதனை—உணர்ந்துமங்கே வோராசன் (சிற்றரசன்)
வன்மைகொண்டு விளக்கிடவே—வரிசையுடன் முற்பட்டால்
(அவனை) நாடுகடத்திடுவன்—நாட்டிடுவன் வன்சிறையில்
(அவன்) குலத்தைக் கெடுத்திடுவன்—கொண்டிடுவனவனுரிமை.

* * * *

பொதுவாட்சி நிலை.

(சித்தமதில்) மாய்கைப் பெருந்திரையில்—மறைவுண்ட மன்னன
பொய்யுலகப்பற்றதிலேப்—புந்திதனைப் புதையவைத்து [வன்
உலகமதிற் பெரும்புதுமை—ஒப்பற்ற சமுதாயம்
தன்னின்பமாங்கதுவும்—தனக்குப்பேரின்பமென்று

சற்றேனுந்தெரியான்காண்!—தடித்தபுத்தி அரசனவன்.
(ஆதலால்) அரசனவனெவ்வழியோ—அவ்வழியே குடிகளுமாம்.
மனிதருணவதனை—மனிதரவர் பறித்திடுவர்.
மனிதரவர் நோகிடவே—மனிதரவர் பார்த்திடுவர்.

சீரற்ற இந்நிலையை—சிந்தைசெய்த நல்லோர்கள்
அரசனவை அணிகியங்கே—அறநிலையை யோதிடிலோ
கொண்டிடுவான் கொடுஞ்சீற்றம்—கொற்றவனிப்பாரதிர
பாரதிருஞ்சீற்றமுடன்—பண்பற்ற பார்மகனும்.

படைத்திடுவான் தனிக்கூட்டம்—(தன்) பக்கமதில் நின்றுவர
நன்மை நனிவளர்க்க—நாட்டமுறுஞ்சில்லோரை
தீமைக்குத் துணைநிற்கும்—தீயர்பலர் தீண்டிடுவர்.
நல்லோர்பலரையங்கே—நடுச்சிறையில் மாட்டிவிட்டு

தீயோர்பலருமங்கே—தீவளியில் திளைத்துநிற்பார்.
இந்தவிதமாக—இடும்பாவனத்தரசன்
துடுக்குடனே யாண்டுவந்தான்—தூய்மைசற்றுமில்லாதான்.

* * * *

அரசன்றன் அகம்பாவம் வளர்க்கும்நாளில் ஆங்கொரு நாள்!

பிறவிப் பெரும்பிணியிற்—பெரும்பாலு மூழ்கவைக்கும்
பேராசைப் பெரும்பேயை—(அரசன்) பேணிவந்த வோர்நாளில்
வழக்கமதுபோலவவன்—வைகறையில் துயில்நீத்து
மஞ்சத்தின் மீதமர்ந்து—மனதிலிவை யெண்ணலுற்றான்

"என்னேகாண்! என்னேகாண்!—என்ராச்சியப்பரப்பதுவும்
என்னேகாண்! என்னேகாண்!—என்குடிப்படையின் பெருந்
[தொகையும்.

ஆண்டிமுதலாண்டைவரை—அனைவருமே யேந்தலென்தன்
பதங்களையே வருடிவாரர்—பாக்கியங்கள் பெற்றிருக்கார்!"

இவ்வெண்ண மிராசனிடம்—எழுந்துநிற்க மலைமலையாய்
உள்ளமதில் வீக்கமுற்று—உயரெழுந்தான் மஞ்சம்விட்டு.
ஆவேசங்கொண்டவனாய்—ஆங்கவனுங் கூச்சலிட்டான்
"உண்மையுண்மை இவ்வுலகம்—என்னைப்போல் ஓர் புருடன்

இதுவரையில் கண்டிருக்கா—திதுவரையுமில்லை இல்லை.
மன்னாதி மன்னவன்யான்—மண்ணுலகோ ரதையறிவர்.
தனித்தவொரு கடவுளுமோ—தரணியிலே யில்லை யில்லை.
ஆங்காங்கு கோயில்கட்கும்—அவைக்குறிய குருக்கட்கும்

இல்லை இல்லையவசியமும்—யேனவற்றைப் பேணவேணும்!"
இந்தவிதம் மன்னனுந்தான்—சிந்தைதனை சீர்மைகெட்டு
மனமென்னும் பேய்க்குரங்காம்—மற்றதற்கே விற்று விட்டு
அறியவொரு சூட்சமத்தால்—ஆகியவோர் கோடறியாம்

அறிவென்னுங் கோடறியை—அகற்றிவைத்துத் துருப்பிடிக்க
மனம்போன போக்கதிலே—மலைத்துமவன் பிதற்றுகையில்.
மின்மினிபோலெண்ணமொன்று—மேலெழுந்து நின்றதங்கே
மேலெழுந்து நின்ற எண்ணம்—மேதினியோர் யாதெனிலோ

கூற்றுவன்றன் எண்ணமென்று—கூறிடுவோம் கூசாமல்
மன்னாதி மன்னரையும்—மற்றுமுள்ள வீரரையும்

சூராதி சூரரையுஞ்—சூழ்ந்து நிற்கும் படைஞரையும்
இந்நிலையிலாகிடினும்—(வேறு) எந்நிலையிலாகிடினும்

குவலயத்து ஜீவர்தமை—குறிபோழ்து கொண்டிடுவான்
பாசமது கயிற்றுடனே—பல்லையுமே நெறித்திட்டு.
குறித்ததொரு ஜீவனையுங்—குறிவேளை கொண்டிடுவான்
இயல்பினதா மிவ்வெண்ணம்—இழுத்தவனை யிடர்ப்படுத்த

தடித்ததொரு எண்ணமதால்—தனிவைத்தா ணெண்ணமிதை
(கூற்றுவன்றன் எண்ணத்தை)
கூற்றுவன்றன் கோல் நிலையை—குறிப்புடனே தனிவைத்து
இனையனவு மெண்ணுகின்றான்—யினங்கெட்ட ஏழையவன்.
"துடுக்குடனே தோன்றுவனோ?—தூர்த்தனவன் காலனென்
[முன்

எவரேதா னியம்பவல்லார்?—யெவரேதானறியவல்லார்?[காண்
(அவனும் என்) பக்கமதில் வாரான்காண்!—பதமருகில் வாரான்
உச்சிதனி லுலவான்காண்—புறம்பிலுமே புழங்கான்காண்
எம்மருங்கு மென்னருகே—எதிர்த்துவரக் கூசுவன்காண்

காலனவன் கனத்தபெரு—கருமிகளுக் கல்லாது
கனமிகுந்த யென்னிடமோ—காட்டவல்லான் றன்வலிமை.
கனமிகுந்தோன் யாரொருவன்—கணக்கதனை வலியுறுத்தும்
வழக்கதனைக் கூறுகின்றேன்—வன்கால னுணர்ந்திடவே

வலிமையுற்ற யென்றந்தை—மகிமையுடன் ஆண்டுவந்தான்
அவனிலுந்தான் பன்மடங்காய்-ஆட்சிதனை செலுத்துகின்றேன்.
என்னரசி னெல்லையதை—யென்றந்தை யவன்யெல்லைக்கு
ஒப்பிடவோ! ஒப்பிடவோ!—ஒப்பிடுதற்குறிய தொன்றோ!

ஆங்குமவ னெல்லையுமோ—யடுத்ததொரு கொசுயிருக்கை.
பின்னுந்தான் கூறுதென்றால்—பிரிந்துள்ள யென்பாட்டன்.
ஆங்குமோர் சிறுநிலத்தை—ஆண்டுமவன் கண்வளர்ந்தான்
அவனாண்ட குறு(கிய)நிலமே—ஆங்கதுமென் னுப்கள்குடில்.

நானுதித்த வம்சமுந்தான்—நாள்வளர நாள்வளர
உச்சிதமாய்த் தழைத்துமது—ஓங்கி வளர்வதுபார்.

உலகமது செல்வமெல்லாம்—உலகமது வலிமையெல்லாம்
உவப்புடனே யென்னிடமே—உருக்கொண்டு வளர்வதுபார்

இன்னுமவை வளரும்—என்றென்று மவைவளரும்
ஏறுநடை யேந்தல்யான்—யென்றேனுஞ் சாகேன்காண்.
வாழ்க்கைதனை யின்பமுடன்—வளம்பெறவே தாம்பெற்று
சாகாநிலையுடனே—தனித்திருந்த நரர்களின்றம்

சரிதமவை பலஅறிவேன்—அவர்சரிதம் மிகஅறிவேன்
(அந்)நரர்களுடன் யானுமங்கே—நலமாகச்சேர்ந்திட்டு
மக்கள்தனை மண்ணுக்கும்—மறலியையும் ஏய்த்திடுவேன்,"

* * * *

வைகறைச் சிறப்பு.

வைகறையாம் வைகறையாம்—வாய்க்குமொரு நற்காலம்
விடியற்நற் காலையென்று—விளம்பிடுவர் நற்றமிழர்
பின்மாலை யென்றுரைப்பர்—பெரியதிருவைண்வரும்
உஷத்காலமென்றுரைப்பர்—உரியரவராரியரும்.

ஏர்லிமார்னிங் கெனமொழிவர்—எழில்பெருகு மாங்கிலரும்
ஆந்திரத்திலதை யுணர்த்தும்—அழகியவோர் மொழியுமுண்டு.
எவ்வெவர் எச்சாதி—எச்சமயமாயிடினும்
நற்காலமாமிதனை—நயமுடனே போற்றிடுவர்.

அநுதினமிந்நற்காலம்—அழகாகத்தானுமுண்டு.
இந்து மதம் ஏசுமதம்—பின்னுமந்த முஸ்லீம் மதம்
இவை நாடும் பொருளொன்றும்—ஈங்கதனை யடைவதற்கு
உற்றதொரு பயிற்சியதை—உணர்ச்சியுடன் பழகிவா

ஏற்றதொரு சுபகாலம்—யெனவுரைக்கும் சமமுடனே.
வேதமது பயின்றுவர—வியன்கலைகளப்பியசிக்க
தேகப் பயிற்சிபெற—தேர்ந்தெடுத்த காலங்காண்
நாளின் முடிவான—நயமுற்ற காலமதாம்.

உஷத்காலமதன்பெருமை—உணராத மன்னனவன்
எண்ணுத யெண்ணமெலாம்—எண்ணி எண்ணிக்களைத்திட்டான்.
களைத்திடவுங் காளையவன்—கண்றுயின்ருன் மறுபடியும்.

* * * *

காலைக் கதிரவன் மேலெழுந்துவர துயில்நீத்தல்.

வேதமது விளக்கி நிற்கும்—வியன் கலைகள் நுகர்ந்து நிற்கும்
ஓதச்சிறந்த பெரு—மிருதியுந்தான் தொழுது நிற்கும்
போதமது தந்திடுவான்—புண்ணியனும் கதிரவனும்
காலத்தனியாழியுடை—கனத்ததொரு கதிரதத்தில்

சாலச் சிறந்ததொரு—தனிவழியாம் வானதிலே
மேலேயெழுந்துவர—மன்னவனுந் துயில்நீத்தான்.

* * * *

மன்னவன் வேட்டைக்கேகல்.

துயில்நீத்த மன்னவனும்—துரிதமுடன் மஞ்சம் விட்டு
வெளிப்போந்து காவலரால்—வேடுவரை யழைத்திட்டான்.
அரசனவனுக்கினையை—அழகணியாய்ச் சிரங்கொண்டு
ஆங்கவரும் வந்துதிக்க—அரசனவர்க்கீதுரைப்பான்.

“வேடுவரே! வேடுவரே!—வெகு விரைவாய் நீங்களுந்தான்
உற்றதெந்தன் வேட்டைக்கு—உடனே புறப்படுங்காண்!”
ஏந்தலவன் ஏவல்கேட்—டெதிர் நின்ற வேடுவரும்
குந்தம் தடிவளைகள்—கொண்டுமவர் முன்னின்ருர்.

முன்னின்ற வேடுவரை—முன்னேகத்தான் பணித்து
தன் தனித்தப்புரவியின்மேல்—தான் பின்னேபறந்தனன்காண்!
அரசனவன் புரவியதின்—அதிவிரைவைச் சொல்லவென்ருல்
முன் சென்ற வேடுவரைப்—பின்வைத்துப் பறந்தது பார்

பின் தங்கிப்போனுர்காண்—முன்சென்ற வேடுவரும்
வேகக் குதிரையது—வெகுதூரம் கடந்ததையும்

தான்றனியாய்ப்போனதையும்—தனியுணர்ந்தான் தரைமன்னன்
உணர்ந்திட்ட மன்னவனும்—உயர் புரவியதன் கதியைத்
தளர்த்திடவு முயற்சிக்க—தன் குதிரை நின்றதுபார்.

* * * *

அருவி நீராடல்—ஆண்டவன் சோதனை. ஆண்டியாதல்!

உச்சியதாம் டோழ்தினிலே—உயர்தாபம் தனைவருத்த
கதியற்று தான்றனியாய்—கண்டனன்காண் காவலனும்
அங்கிங்குஞ் சுற்றியவன்—அயற்வுற்று நிற்கையிலே

அழகியவோரருவியதாம்—அதன் கரைமேல் தனைக்கண்டான்
இனிக்குமொரு ஜலப்போக்கை—இராசனவனோக்கிடவும்
சோகமது நீங்கியவன்—சுகப்பேற்றைத் தானடைய
நீராடல் செய்வதொரு—நியமமதாமெனவெண்ணி

தன்செல்வப் புரவியதைத்—தான்விட்டுக் கீழ்குதித்து
கண்டங்கோர் மரமதனில்—கடிகையதில் கட்டிவிட்டு
அணிமுதலா மாடைவரை—அத்தனையுங் களைந்து வைத்து
அடைந்தனன்காண் அருவியினில்—அழகுடனே நீராட.

உடல் குளிர உள் குளிர—உச்சிதமாய் ராசனவன்
திருப்தியுடன் நீராடித்—திரும்பினன் காண் கரை நோக்கி
இவ்வேளை தனையுமிங்கே—எவ்வேளை யென்றுரைப்போம்
ஜோதிக் கடவுளவர்—சோதனைசெய் வேளையிதோ.

கரையேறி மன்னவனுங்—கட்டிய தன் குதிரையையும்
களைந்து வைத்த ஆடைமுதல்—ஆபரணமத்தனையும்
கண்டிலனால்! கண்டிலனால்!—கலங்கி மனந்திடுக்கிட்டான்.
திடுக்கிட்டமன்னவனுந்—தீண்டநின்றான் பெருஞ்சீற்றம்.

சீற்றமிகக்கொண்டவனுஞ்—சீறிவிழுந்தங்கங்கே
தனையங்கெதிர்த்திட்ட—தனிக்கள்வன் அவன்றன்னின்
துணிவதனை யுன்னியுன்னி—துடிதுடித்துத் துள்ளிநின்றான்
அடுக்கடுக்காய்ச் சாபமவை—அவன்றன் மேலேவிநின்றான்.

அகப்பட்டா லப்பொழுதே—அவனுயிரு மகன்றிருக்கும்
தனிமரம்போல் தானின்று—தன்சீற்றம் வெளிப்பிதுக்கி
ஓலமிட் டலற்றிவரும்—ஒலியதனைத் தாம்கேட்டு
மாமிருந்த பறவையவை —மாயமதாய் மேற்கிளம்பி

உன்மத்தன வன்றலைமேல்—உயர்வட்ட மிட்டனகாண்.

* * * *

திக்கற்ற அரசன் சிந்தனை.

வேட்டைக்குப் புறப்படுமுன்—விறல்வேந்தனுங் கவன்காண்
வேட்டைக்கு வந்திங்கு—வெறுமாண்டி யானவன்காண்!
காலத்தின் கோலமதைக்—கணக்கெடுத் தியம்புதற்கு
ஞாலமதி லெவர்க்கெளிது?—ஞாலமதிலெவர் வல்லார்

அருமறையே யவையறியா!—ஆங்கதனின் தனிக்கதியை
பூவுலகம் படைத்ததொரு—பூமகனும் அறியான்காண்.
மாவுலக மளித்துநிற்கும்—மாலவனு மறியான்காண்
சீவர்களைக் கரைசேர்க்கும்—சிவனவனு மறியான்காண்

இவரறிய வல்லரல்லேல்—எவரறிய வல்லவர்காண்!
எல்லாமாய் அல்லவுமாய்—யெங்கெங்குந் தன்மயமாய்ச்
சொல்லாமற் சொல்லி—சுகமளிக்கும் சத்தியதை,
சகசநிட்டை தனில்கண்டார்—தாமிருந்தே தாமறிவார்

அவரறிந் தமர்ந்திருப்பார்—அக்காலமதன் கோலத்தை

* * * *

அரைநிமிட நேரமதில்—ஆண்டிநிலை யுற்றமன்னன்
தன்னந் தனியவனாய்த்—தனித்ததொரு மாமடியில்
மிக்கக் களைத்தவனாய்—மிகக்கிலேசங் கொண்டவனாய்
தனக்குட் பலபலவாம்—தானினைந்து தவிக்கின்றான்.

பலநினைந்து பரிதபிக்கும்—பார்மகன்றன் எண்ணமதில்
அத்தலத் திற்கருகே—ஆங்குமொரு சிற்றரசன்
இவனுக் குகந்தவொரு—இனமான இச்சகன்றன்
நினைவங்கே தோன்றிடலும்—நிலைகெட்ட இவ்வேழை

ஆங்கவனை நினைந்துமிவன்—அடுக்கடுக்கா யோசிப்பான்
" அவனிருக்கை நாடியங்கே—அரசனும்யாம் சென்றக்கால்
தங்கிநிற்கக் குளிர்நிழலுந்—தவிர்க்கப்பசி சிறுவுணவும்
வன்றாகந்தீர்க்கவொரு –வளமான பானமதும்
வகைவகையா யவனளிப்பான்—வன்துயரும் நீங்கிடலாம்."

* * * *

சிற்றரசன் மாளிகையில் இவன் நிலை.

இவ்வாறு யெண்ணியவன்—இருக்கைவிட்டுத்தானெழுந்து
கான்பாதைதனிலூடே—கனவிரைவாய் நடக்கலுற்றான்.
துரிதமுடனடந்தேகி—(சிற்றரசன்) துவாரமண்டை வந்துநின்
துவாரமதின் பக்கலிலே—தூங்கிநின்ற ஆராய்ச்சி [றான்.
மணியதனை ஒலித்திடவும்—மற்றுமங்கே வோர்காவல்
ஓடி உடன்வந்து—உற்றதொரு நுழைக்கதவை
உடனவனுந்திறவாது—உற்றதொரு நாரிவனின்
தனித்ததொரு நிலையதனை—தனியிடுக்கால் தான்பார்த்தான்.
உரியவொரு ஆடையின்றி—உடைகோவணமுமில்லா
ஆண்டியிவன்றனைக்கண்டு—ஆங்கவனுஞ்சிரிக்கலுற்றான்.
இடும்பாகச்சிரித்தவனும்—இடுக்கருகில் நெருங்கிநின்று
" யார் ஐயா ! யார் ஐயா !—ஈங்குற்றகாரணமென் ?
அவ்வேடந்தானும்து—ஆங்கெதற்கோ யாங்கெதற்கோ
இற்றைக்கு வியாபாரம்—இங்கொன்றும் வேண்டாம்போம்.
காய்கறியும்வேண்டாம்போம் !—கனிவர்க்கம் வேண்டாம்போம்
நீருன்றன் மனைநல்கி—நீள்கோவணமுடுத்தும்
உலகதனில் பிராணிமுதல்—ஊர்வனவாம் பறப்பனவாம்
அவ்வவைக்குமங்கங்கே—(இயல்) ஆடையவை அடைவுண்டு.
அவற்றினுமோர் கீழ்நிலையோ—அறிவற்ற உன்நிலையும்
வெட்கமதை யெங்கொளித்தாய்—வீணிங்கேன் வந்திட்டாய்? "
இழித்திழித்தவன் பேசி—இன்னுமின்னும் அவன் சிரித்து
திரும்பியுமே கோட்டைக்குள்—தீவிரமாய்ப்போய்விட்டான்.

காப்போன் அவன்ருனும்—கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டு
திரும்பியவன் போகையிலே—திக்கற்ற தீனனிவன்
"உன் அரசன் யான்காணுய் !—உயர்ந்ததிரு அகம்பாவன்
உணராயோ நீயென்னை—உடனுடனே கதவுதிற.

அரசன் அகம்பாவன்—அவசரமாய் இங்குற்றேன்
உன்னுண்டையவர் தமக்கும்—உடனே போய் உரைத்திடுவாய்.
அரசனென்றன் கோபத்திற்—கஞ்சவும் நீ தேவையில்லை.
உடன் நீபோய் உரைத்திட்டால்—உன்றனையும் மன்னிப்பேன்."

* * * *

அரையதனில் உடையற்ற—அம்மணன்றன் உரை கேட்டு
அடைந்தனன் காண் அடல்சீற்றம்—அரண்மனை மெய்க்காவ
"போடா, நீ போயிடடா—புத்திகெட்ட அடிமடையா [லவன்.
எழிலோங்கும் "அகம்பாவர்"—எம் ஏந்தல் நீயோதான்.

சொற்பனமோ வுன்றனக்கும்—சொரணைகெட்ட அடிமாடே !
அகம்பாவனரசனென்ற—அவன் கனவு கண்டாயேல்
கனவதனில் என்னையும் நீ—கணக்குடனே நடத்திடுவாய்.
இங்கேயும் நுழைக்கதவு—யில்லை யில்லை யென்று மில்லை

இருப்பது வாய் கணுக்கண்டால்—இவனுள்ளும் வந்திடுவாய்."

* * * *

இங்ஙன மாயவன் கூறி—இறுமாப்பாய்த் திரும்பிவிட
கடுஞ்சீற்றம் தலை சுழற்ற—கைநெறித்து நின்று மன்னன்
ஓலமிகத்தானிட்டு—ஓங்கிய தன் முஷ்டியதால்
கதவதனைக் குத்திடவும்—கதவுடனே திறந்ததுவே.

கதவதுவும் திறந்துவிடக்—கடுஞ்சீற்றக் காவலவன்
ஓடி உடன் வந்து—ஓங்கியவன் பேசுகின்ருன்
"முட்டாள் முழுமகனே !—மூளையில்லாச் சிறுமகனே
உள்ளங்கே நுழைந்திடவும்—உயரியவுன் பெருவெறியோ.

ஆனால்தான் நீ வாடா—அம்மணனுய் நீ வாடா
என்றன் எசமான் முன்—ஏய் ! நீயும் வந்திடடா.
நிச்சயமாய்க் கூறுவன் கேள்—நீயதனை ஓர்ந்திடடா
உண்ணுழையுமுன்னுவல்—உலைவைத்துப் போகுமடா.

விரைவுடனே வெளி வரவே—விரும்பிடுவாய் நீயுணர்வாய்
இதுவுண்மை ! இதுவுண்மை—இப்பொழுதே போயிடடா"

*   *   *   *

சிற்றரசன் போஜனகாலம், ஓர் சீமான் பிரவேசம், நுழைவாயில் காட்சியில் ஓர் சாட்சி.

நுழைவாயில் தனிலங்கே—விழைந்துவர வாய்வாதம்
உள்ளங்கே சிற்றரசன்—உண்டியது சாலேதனில்
உரியபெரும் நண்பருடன்—உணவருந்தத்தானமர்ந்தான்.
அமர்ந்தங்கே யாவருமே—அறுசுவைகள் சுவைத்துவர
கெலகெலன நகைச்சத்தம்—கேட்டிட்டாரப்பொழுது
சத்தமது கேட்டவோரு—சடிதிசிறு நேரமதில்
சிற்றரசன் ஓர்நண்பன்—சீக்கிரமாயவண் போந்தான்.
வந்தவனே உபசரித்தும்—மற்றவனே அமரவைத்து
விதவிதமா யுபசாரம்—வெகுவாகத்தான் செய்தான்
அவ்வினிய வேளையதில்—அரசனவன் நல்லன்பன்
சிரிப்பை யடக்கிடவுஞ்—சிரமமிகத் தான்பட்டான்.
ஒருவாறுய் சிரிப்பதனே—ஒடுக்கியுமே யாங்கவனும்
ஓதுகின்றுன் ஓதுகின்றுன்—உயர்திரு சிற்றரசனுக்கும்
என்னன்பர் என்பிரபுவே—எழில்நிறைந்த என்பிரபுவே
வெளிதனிலே யோர்மனிதன்—வெறுமுண்டமாங் கவன்காண்.
கோவணமே கட்டியில்லே—கோமகனுங் கூறுகின்றுன்
தம்மு னவன் வந்தால்—தாமவனே யறிவீராம்
கோமகன் றனேக்குறிக்க—கொற்றதொரு பவிஷுமில்லே
அரசர்க் கரசனவன்—அகம்பாவன் றனக்கிருக்கும்.
தாடி நிகர்த்ததொரு—தாடியுந்தா னுடையனவன்
நுழைவாயில் தனிலவனே—நும்காவல் தடுத்துவரான்
உடையில்லாக் கடையனவன்—உன்மத்தன் றுனவனும்
தனித்தவனின் செய்கையதில்—தனிச்சூழ்ச்சி தானிருக்கு
உம்முன்னே வந்திடவும்—உறுவாதம் புரிகின்றுன்.

*   *   *   *

அரசனுத்திரவு.

பிச்சை யெடுத்தலையும்—பெருத்ததொரு கூட்டமதால்
அல்லும் பகலுமிங்கே—அலுத்துள்ளே னனுதினமும்
என்றிடினு மிங்கவனை—இப்பொழுதே பார்த்திடுவன்.
உடனவனைக் கொணர்ந்துவா—உயரியவோ ராஞ்ஞையிட்டான்

*　　*　　*　　*

ஆண்டியைச் சபைமுன் கொணர்தல்.

கொற்றதிரு சிற்றரசன்—குணநிறைந்த உத்திரவைத்
தலையவைமேற் றூம்தாங்கி—தங்கிநின்ற காவலர்கள்
உடனுடனே வெளிப்போந்து—ஒருநொடியி விழுத்துவந்தார்.
கோவணங் கூடில்லாது—குவலயத்தில் நடமாடுந்

தனிமக்கள் தமைக்கண்டால்—தடவுலகந் தானகைக்கும்
உறுமங்கோர் வழக்கதுபோல்—ஒருசேர்ந்தோர் சிறுகூட்டம்
ஆண்டியிவன் காண்டலுமே—அதிசயத்தால் நகைதொடுத்தார்.
ஈங்கவற்றை எள்ளளவும்—இலட்சியமே செய்யாது

ஏழையிவன் சிற்றரசன்—யெதிர்நோக்கி யேகுகின்றான்.
சிற்றரசன் தரிசனந்தான்—சீக்கிரமாய் கிடைத்திட்டால்
சுற்றிநிற்குந் தொல்லையெல்லாம்—சோர்ந்துமவை தாம்மறையும்
என்றபெருநம்பகத்தால்—எம்மரசனுண்டியவன் (ஆகம்பாவன்).

சிற்றரசன் குசலமது—செய்வதற்குள் தான்முந்தி
துரிதமுடன் றனைமறந்து—துருதுருத்துச் சொல்லுகின்றான்.

*　　*　　*　　*

ஆண்டியவனலற்றல்.

தனக்குற்ற நிலையதனை—தானுமங்கே யுணராதே
தானடுத்த சிற்றரசன்—தானவனுமிளகாத
வார்த்தையிவை சொல்லிநின்றான்—வளங்கெட்ட ஆண்டியிவன்
“ எனக்கிந்த வேடமுந்தான்—யெங்குற்றதென்றையம்

நீரங்கே கொண்டிருப்பீர்—நிச்சயமாய் ! நிச்சயமாய்
மற்றிதன்றன் உண்மையினை—மறுக்ஷணத்தில் நீரறிவீர்.
முற்றமது பலகையின்மேல்—முண்டொன்றுதானிருக்கு
முதன்முதலில் உதவிடுவீர்—முழுவிரைவோ டுதவிடுவீர்."

இம்மட்டுமில்லாது—யினங்கெட்ட யேழையவன்
மேற்பல்பல் வார்த்தைகளும்—மேட்டிமையோடுளரலுற்றான்.
"பளபளெனப் பட்டாடை—பளபளென உடைவாள்கள்
உச்சியதாஞ் சிரமதிலே—உயர்ந்த திருமணிமகுடம்

இவையெவையுந்தானணிந்து—ஏறதுபோல் நின்றிட்டால்
மண்டலத்து மாக்களுந்தான்—மன்னனென மதித்திடுவர்.
அன்றியவன்பிறவி—யடுத்ததொரு தேகமதில்
அரசனவனம்சமவை—அறிந்திடவோர் சக்தியில்லார்.

இவ்வுண்மை நீருணர்வீர்—ஈங்கதையும் நானுணர்ந்தேன்"
இவ்வண்ணந்திரையரசன்—எதிரிவன்றான் பிதற்றிவர.
அரசன்றன் முகக்குறியால்—அசங்கியமாயிதை மதித்தான்.
முகக்குறியைக்காண்டலுமே—மூடனிவன் தயங்கிசற்று

மறுபடியுங்கூறுகின்றான்—மதியிழந்தமற்றுவன்
"ஏனையா ! ஏனையா !—யெனையறிந்தும் நீருமங்கே.
எழுந்திருக்கயில்லை மற்றும்—எவ்வாறோ நோக்குகின்றீர்
இதற்குற்ற காரணமும்—யினிமன்னனல்லனோயான்

என் இடத்தில் மாற்றான்றான்—எழிலரசு ஏறினனோ ?
உற்றதொரு சதியதனில்—நுமக்குமங்கோர் பங்குமுண்டோ.?
அப்படித்தானென்றாலோ—அரைக்கணத்தென் இன்னுயிரை
தப்பாது அகற்றிவிடும் !—தரையதிலே நானிருந்தால்

தலையசைக்க ஈங்கெந்தன்—தனித்ததொரு பெரும்படையும்
யெனையெதிர்க்குமேதிலரை—யென்றென்றும்பழி தொடுப்பர்."

* * * *

இவ்வண்ணமவனுளறி—யிருக்குமந்த வேளையிலே
சிற்றரசன்றன்னுளத்தில்—திண்மையுடன் இளக்கமுற்று
" உன்மத்தனுங்கவன்காண்—உளறிவரான் விதவிதமாய்
காக்குமொரு கடவுளுந்தான்—காத்திடுக ஈங்கவனை.
பசிதீர்க்கவுணவதுவும்—பலகையின்மேல் முண்டதையும்
இவன்றனக்குத் தானுதவி—இவண்விட்டு விரட்டு" மென்றான்.
திரைசெலுத்துஞ் சிற்றரசன்—திரணமதா யிவைசொல்ல
அகம்பாவன் றன்னுள்ளே—அடக்கிவைத்த பெருஞ்சீற்றம்
பொங்கியங்கே வழிந்திடவும்—புலம்பியுமே யலற்றுகின்றான்
" துரோகிப் பெருந்துரோகி—துங்கமிகு நின்மனையும்
உன்னதொரு தேகமதும்—உருவில்லா தழிந்திடணும்!
உச்சிதமாய் நற்காலம்—உதித்திடும்பா ரக்காலை
உன்மனையுள் நீயிருக்க—உன்மனையைக் கொளுத்திடுவேன்."
ஆடையுந்தான் வாங்காதே—அரும்பசியுந் தீர்க்காதே
பிதற்றியயிவ் வண்ணமதாய்—பெருவோட்ட மெடுத்தனன்பார்.
உள்விட்டு வெளியோடி—நுழைவாயிற் றனைக்கடந்து
உணர்வற்றுப் போகும்வரை—ஓடினன்காண் வெகுதூரம்.
ஓடியதோ ரோட்டமதால்—ஒடுக்கமவன் றானடைந்து
பாதையொரு பக்கமதில்—படபடத்துக் கீழ்வீழ்ந்தான்.
வன்கோபம் வலிற்றிழுக்க—வகையேது மறியாது
வெகுநேரம் குழப்பமொடு—வழியதனில் படுத்திருக்க
காலனைப்போல் கங்குலதும்—கடுகியுமே சூழ்ந்ததுபார்!
இரவதுவும் நனிவளர—இவன்குழப்பம் மேல்வளர
காலைமுதல் கங்குல்வரை—கடும்பசியா லிளைப்புற்று
கவலையெனுஞ் செல்லவன்றன்—கனமனதை கரைத்துவர
கேட்டனன்காண் ஓர்சத்தம்—கெடபடென கடுஞ்சத்தம்
குதிரைக்குளப் போசையதை—குறிப்பாகத் தானுணர்ந்தான்.
குளம்போசை நெருங்கியிட—குறித்தபல தீவர்த்தி
வெளிச்சமவை தான்கண்டான்—வெருண்டிருந்த வேந்தனவன்
வெளிச்சமவை நெருங்கிடவும்—வெகுவிரைவாய் வழிவிளக்கர்
கூட்டமது கண்டனன்காண்—கோழைமன மன்னனவன்
வழிவிலக்கர் முன்செல்ல—வாய்ந்ததிறல் பெருவீரர்

பின்றொடர்ந்து வருவதையும்—பிறனிவனுந் தான்கண்டான்.
விறல்வீரர் உடையவைமேல்—விளங்கிநின்ற பில்லைகள்மேல்
எவரங்க மிவரெனவும்—ஏழையிவன் கண்டிட்டான்.
பில்லையவை மேற்குறித்த—பெயருடையோன் பிரபு அவனை

என்றென்று மிவன்றானும்—எப்பொழுதும் வெறுத்தவன்காண்!
அவன்பெயராம் அவன்பெயராம்—ஆங்கவனைச் சகுனியென்பார்.
சகுனியவன் பல்லக்கில்—தன்தனித்த பிருதுடனே

தான்வரவு மிவன்நோக்கி—தன்னுதிரம் கொதிவுற்றான். [றான்
கொதித்திடவும் கோமகனும்—கோர்வையதாய் எண்ணுகின்
"உண்மையது! உண்மையது!—உச்சிதமாம் என்றவிசில்
மாற்றான்றா னேறிவிட்டான்—மயக்கஞ்சற்று மில்லைஇல்லை!

இன்னாள் வரையுமங்கே—என்னரசைத் தான்பறிக்க
ஏற்றதொரு தனிச்சதியும்—இருந்திருக்க வேணுமங்கே!
இற்றைக்கே இப்பொழுதே—ஈங்கதன்றன் மெய்யுணர்ந்தேன்.
என்னரசை யிந்நேரம்—இரக்கமற்ற ஓர்துரோகி

கைக்கொண் டிருக்கவேணும்—காணவுமோர் சாட்சியதாய்
நள்ளிரவு தனிலந்த—நயவஞ்சன் சகுனியவன்
புதுவாசன் பொற்பாதம்—போற்றிடவும் போகின்றான்"
என்றிவ்வா றவனெண்ணி—எழுந்திருந்து தரைநீக்கி

கூட்டமதைக் குறுக்கிட்டு—குறுகுறுப்பாய் நின்றிட்டு
ஓலமது செய்துவரான்—உயர்வானந்தானதிர!
"ஓய் சகுனி! ஓய் சகுனி—நும்துரோகச் சிந்தையிலே
ஈங்கும்மைச் சந்தித்தேன்—யென் மாற்றான்றனை நாடி

உவப்புடனே போயங்கே—உம்முடியைத் தாழ்த்திடவும்
நள்ளிரவில் நீர் போரீர்—நடையின்றி ஓட்டமதில்!
நடுவங்கே உமையழிக்கும்—நாசமின்றிருக்கவேணும்!
இடையில் உமைத்தொலைக்க—இக்கட்டின்றிருக்கவேணும்!"

வழிமறித்து மற்றுமவன்—வம்பிழுத்து நின்றுவர
உடைவாளோர் கட்டையதால்—ஓங்கியவன் சோர்முகத்தில்
அடித்துவிட ஆங்கொருவன்—அவனின்ற மற்றவரும்
இவன்பிடித்துக் கட்டிடவும்—எடுபடியாய் ஓடிநின்றார்.

குழப்பமதுமிவ்வாறு—குமுறிநிற்கும் வேளையிலே
சகுனி சற்று தாமதித்து—சற்றுமங்கே தயங்கிட்டான்.
தயங்கியவன் நின்றிடவும்—தனித்த அவன் கூட்டத்தார்
அவனுடலைக் காப்பாற்ற—அவன்சூழ்ந்து நின்றிட்டார்.

இவ்வண்ணமாகவங்கே—இருவினடியவை கழிந்திடவும்
திரைமறைவில் தானிருந்த—திருமிகுந்த சகுனியவன்
உற்றதொரு சச்சரவின்—உண்மையினைத் தானறிய
பல்லக்குத் திரையதனை—பண்புடனேயவன் நீக்கி

முன்னின்ற காவலரை—முகக்குறியால் வினவலுற்றான்.
முகக்குறியைக் கண்டிடவும்—முன்னின்ற யேவலர்கள்
வழிமறித்து வாதுசெய்யும்—வன்பித்தனவன் கொணர்ந்தார்.
பித்தனவனிலைநோக்கி—பிரபுவவனும் புன்னகையுற்

றெதிர்நின்ற ஏழையையும்—இனையனதானுசாவலுற்றான்.
" ஏன் என்னை ஏசுகிறாய்!—எழுந்ததுந்தன் குறையென்ன?
யானலது என்றன்றன்—மனிதர் பிழையென்செய்தார்?
அகாலமிது கண்டிடுவாய்—அவையுரைக்கப் போகாது

காலையது விடிந்ததின்பின்—கதிரவனும் எழுந்ததின்பின்
நாளையது போழ்தெந்தன்—நயமிகுந்த தர்பார்முன்
உன்குறையை நீ குறிக்கில்—உற்றதுணையானளிப்பேன்.
என்றந் தெழில்பிரபுவு—மிவ்வா றுரைத்திடவும்

காலத்தின் கோலமதின்—கணக்கறியா மூடனிவன்
அகம்பாவ னரசனுந்தான்—ஆங்கிவையுஞ் சொல்லுகின்றான்
" கனத்ததொரு மையிருட்டாய்—கங்குலுந்தா னிறைவதனால்

ஒருவர்முகம் மற்றவரும்—உணர்ந்திடவும் போகாது
தீவர்த்திக் காரரைநீர்—தீரமுடனிங் கழைத்தால்
அகம்பாவ னரசன்யான்—ஐயமறத் தெரிந்திடுவீர் "
இதுகேட் டெழில்சீமா—னினியனவன் முகஞ்சுளித்து

கோபக் கனல்வளர—கொதித்தவனுங் கூறுகிறான்
" நல்லதொரு கதைதானும்—நவின்றுவிட்டாய் பித்தகனே!
அறிவுத்திரு காணியதும்—அவிழ்ந்திருக்க அவையறைந்தாய்!
உன்னதொரு நற்காலம்—உளறிவிட்டாய் என்றிருமுன்!

உயாரசன் (அகம்பாவன்) ஆகிடிலோ—உன்னுயிரை உடன்முடிப்
அவன்றனது குறுக்குவழி—ஆங்கதுவாய் நீகாண்பாய்! [பன்
இந்தநல்ல காசதுதான்—இதைக்கொண்டு நீயுமுன்றன்
உடையுணவு உதவிக்கொள்—உடனிவணின் றோடிவிடு

அல்லாக்கா லுன்னுயிர்தான்—அந்தகனூர் சேர்ந்துவிடும்!
நிச்சயமாய்ச் சொல்லிவிட்டேன்—நிமிஷமிங்கு நில்லாதே"
என்றிவ்வா றவனியம்பி—இனத்தவரைத் தான்விளித்து
காலமது தாழ்த்தாதீர்—கடுக நடமினென்றான்.

பிரபுவவன்றன் ஆஞ்ஞையதை—பின்னவரும் தாமேற்று
கடுகியவர் நடந்திட்டார்–(பித்தன்)கண்மறையப் போய்விட்டார்
கண்மறைய அவர்நடக்க—கைக்கிடைத்த நாணயத்தை
திருப்பித் திருப்பியவன்—திருக்கண்ணால் பார்த்திடவும்

தலையில்தனி முடியோடு—கையதனிற் கோலோடு
உயர்ந்தபெரு ஆடையுடன்—உயர்ந்ததிரு ஆசனத்தில்
தன்னுருவம் தான்கண்டு—தவித்தனன்காண் புழுவதுபோல்!

தன்னகர் நுழைவாயிலில் தானிருக்கக் காணல்.

இன்னசெய்தோ மேதுற்ற—தென்றதொரு சிந்தையற்று
பிரபுஅவனின் கூட்டமதை—பின்றொடாரத் தான்போனான்!
நடந்தனன்காண் நடந்தனன்காண்-நள்ளிரவில் நடந்தனன்காண்
வெகுதூரம் நடந்தனால்—வெகுகளைப்பு மவனுற்றான்.

களைப்பதுவோ தலைசுற்ற—காலவையும் பின்னினிற்க
நடக்கவுமே முடியாமல்—நானிலத்தில் தான்விழுந்தான்!
விழுந்தவனும் பகல் விளைவை—மிகமறந்து தூங்கிவிட்டான்!
தூக்கமதுதான் கலைந்து—சுற்றியவன் பார்க்கையிலே

வெய்யிலது தவழ்ந்துவா—வான்குருவியுயர்பறக்க
கண்டனன்காண்! கண்டனன்காண்!—கண்டிலன்காண் தந்நிலை
காலமது தாழ்ந்திடவும்—கவலைமிகப்பெருகிடவும் [யும்!
தானிற்கும் தலமதனை—தன்கண்ணால் தான்பார்க்க

தன்னதொரு தலைநகர்தன்—தனிக்கோட்டைவாயில் கண்டான்!
காலையதாம் வேளையிலே—கற்கோட்டை கதவதுவும்
குறித்தவொரு போழ்துவரை—குறிப்பாகப் பூட்டிநிற்கும்
இந்தவொரு நேரந்தான்—இவனங்கே தனைக்கண்டான்.
கோட்டைப் பெருவெளியில்—கொற்றப் பெருவியாபாரக்
கூட்டமொன்றைத் தான்கண்டு—கூட்டநடுத்தான் புகுந்தான்
புகுந்தயிவன் றன்னிலையை—புதுமையதாய் பார்த்திட்ட
காலியவர் சிலபேர்கள்—கேலியது தான் செய்தார்!
பரிதாபவவன்கதியைப்—பார்த்ததொரு வியாபாரி
இரக்கமவன் தான்கொண்டு—இவன்றனக்குங் காவடியில்
பாலருந்தத் தந்திடவும்—பட்சமதாய் தான் குடித்தான்.
பருகியிவனிருந்திடவும்—பட்சமுடன் வியாபாரி
இவன் கதையைக் கேட்டிடவும்—இவனுமங்கே இயம்புகிறான்.
தானடைந்தத்தனித்துயர்க்குத்—தாயகமாமதையுணர்ந்து
அரசனவனமைதியுடன்—அவனுக்கு மீதுரைப்பான்
"சென்றதொரு இரவதிலே—சேர்ந்துநின்றேன் தனிக்காட்டில்
கொள்ளையொரு கூட்டத்தார்—கூடியங்கு தாம் வந்து
வழிமறித்து மற்றுமென்றன்—வாய்த்த சிறு பொருளுடனே
ஆடைமுதலாபரணம்—அத்தனையும் பரித்துவிட்டார்!
கால் நடையாய் கான்கடந்து—கண்டனன் மற்றிங்கும்மை
தனித்த யெந்தன் வரலாறும்—தாமறியவேண்டுமென்றால்
(யான்)பெருத்தவொரு வியாபாரி—பேரரச னவனறிவான்.
அரண்மனையில் எல்லோரும்—ஐயமற யெனையறிவர்.
உற்றதொரு அரண்மனைக்குள்—உடன்கொண்டு செல்வீரேல்
ஆங்குறுமோ ரென்னன்பன்—ஆடைபணந் தானளிப்பான்.
இதற்குற்ற கைம்மாறும்—இனமுடன்யான் உமக்களிப்பேன்."
அபலையவன் வேண்டுதலை—அன்புடன்தான் நடத்திவைக்க
வர்த்தகனும் உடன்பட்டான்—வண்டிதனில் ஏற்றிவைத்தான்.
இருவருந்தா னிவ்வாறு—இருந்துவரும் வேளையிலே
கோட்டைக் கதவதுவும்—குறிகாலந் திறந்திடவும்
வண்டிதனை ஓட்டிவிட்டான்—வர்த்தகனு மப்பொழுது
வெளிக்கோட்டை வாயிலதை—வெகுதூர முட்கடந்து

உள்கோட்டை வாசலதை—உடனவரு மடைந்திடவும்
மற்றந்த வர்த்தகனும்—மனங்கொண்டான் தான்பிரிய
பிரிய அவன் முற்படலும்—பின்னவன்றன் ஊர்பேரை
தான்கேட்டுக் கொண்டனன்காண்—தந்நிலையை தானுணர்ந்தே.
வர்த்தகன்ருன் போயிடவும்—வளமிழந்த மற்றுமிவன்
தடபுடலாய் வாயிலினுள்—தானவனும் புகுதலுற்ருன்.
பெருத்ததோர் காயமதில்—பேருதிரந் தான்சிந்த
கண்டதொரு காவலிவன்—கடத்தலையுந் தடுத்திட்டு
உடனே திரும்பிடென்ருேர்—உத்திரவு தானுஞ்செய்தான்.
பஞ்சையிவ னதுநோக்கி—பரிதபித்த குரலுடனே
"நல்லதொரு நன்மகனே—நான்கடக்க நீவிடுப்பாய்
உன்றனையும் யானிங்கே—உச்சிதமா யறிந்திடுவேன்
எனைநீயு மறியாயோ?—ஏந்தலுந்தன் எஜமான்யான்
அகம்பாவன் அரசனல்லோ—அவன்நீயு மறியாயோ?
இவ்வார்த்தை யவைகேட்ட—இருங்காவ லவன்ருனும்
அதிசயமும் மிகக்கொண்டு—ஆங்கழைத்தான்.மற்றவரை.
ஓடிவந்தார் மற்றவரும்—உடன்சூழ்ந்தார் ஈங்கிவனை
இளைத்தஇவன் றனைச்சுற்றி—இருந்திட்டார் படைவீரர்!
இவன்கதையை மற்றுமந்த—இயற்பகைதான் உள்கேட்டு
உள்ளவனைக் கொணர்ந்துவர—உத்திரவும் தான்விடுத்தான்.
உத்திரவு கிடைத்திடவும்—உடனின்ற வீரரவர்
பின்கட்டாய்க் கட்டியவன்—பிடரிநெட்டித் தள்ளிவந்தார்.
தள்ளிவந்த மற்றிவனை—தர்பார் முன்னிறுத்திட்டார்.

"அகம்பாவன்" தன்ஞசனத்தில் மாற்ருன். தெய்வத்திரு ஒளி.

தர்பார் முன்னின்றிடலும்—தன் தர்பார் திருத்தவிசில்
மாற்ருன் புது அரசன்—மாட்சிமையாய் வீற்றிருக்க
கண்டிடவுங் கண்பூக்க—கடுநடுக்கங்கொண்டிட்டான்.
மற்றங்கே அவன் சுற்றி—மயக்கமுடன் பார்த்திடவும்

தன்னரசி இருக்கையிலே—தானவளைக் கண்டிட்டான்!
புது அரசன் பதமருகில்—புனிதமுடன் வீற்றிருந்தாள்!
இத்தோடே நில்லாது—இன்னுமந்த புது அரசன்
முடிமீது விளங்கியவோர்—முழுஜோதி தான் கண்டான்!
இவைகண்ட அகம்பாவன்—இடிவிழுந்தாலன்னதென்ன
உள்ளம் உடல் பதறி—உணர்விழந்து நிற்கையிலே
தர்பார்மேல் வேற்றரசன்—தனிஇவனை கேட்கின்றான்.
“ நல்லதொரு அகம்பாவா—நானிருக்க உன்றவிசில்
என்முன் நீ நிற்பதுவும்—ஏததுதா னியம்பிடுவாய் ”
இவ்வாறவன் கேட்க—எதிர்நின்ற அகம்பாவன்
உற்றபெருதிடமுடனே—உரிமையுடன் தானுரைப்பான்
“ நேற்றுவரையான் அரசன்—இற்றை நீ அவணிருந்து
என்னுயிர்தான் முடித்திடினும்—என்றென்று மிவ்வுலகில்
இன்னும் நான் ‘ **அகம்பாவன்** ’ ‘——’—இந்நாட்டரசனென்ற
உரிமையது போகாது—உணர்ந்திடுவாய் இப்போழ்தே ”
“ மூடா! முழுமூடா!—முற்றியவோர் உன்மத்தா
என் நாமம் **அகம்பாவன்**—யானிருந்தேன் நேற்றிங்கே
நேற்று மதன்முன்னும்—நெடுங்காலமிருந்துவரேன்.
அகம்பாவம் அறிவீனம்—அவைகொழுத்து வளர்வதினல்
உனதுயிர்க்குற்றதொரு—உலையதுவும் சமைக்கின்றாய்!
கொலைஞரவர் கையிலுன்னை—கொடுத்துவிடு முன்பங்கே
உற்றதொரு உண்மையினை—உணர்த்திடுவாய் உன்மதிக்கு!
நான்கூறும் வார்த்தைதனை—நன்னயமாய் அறிந்திடுவாய்!
உடலுயிர்தான் உழைத்துவரும்—உயர்பட்டவர்த்தனர்காண்!
முடியவைதான் வடுக்கொண்ட—முழுமன்னர் கூட்டங்காண்!
அன்பதனின் ரசமதனை—அநுதினமும் நுகர்ந்துவரும்
பட்டத்தரசியையும்—பார்த்திடுவாய் பதமருகில்!
அழகியபேர் பல்லாண்டு—அவர் யாரும் ஓதிவரார்!
இருக்கையிலே நீ பார்ப்பாய்—ஈங்குன்றன் கண்முன்னே!”
என்றவனுமியம்புகையில்—எழுந்திருந்து சபையோரும்
“ பாரரசன் **அகம்பாவன்**—பல்லாண்டு வாழ்க ” என்று
பஞ்சையிவன் நெஞ்சதிர—பாடியதைக் கேட்டிட்டான்!

பதமருகில் வீற்றிருந்த—பண்பரசி அவளெழுந்து
பட்டத்தில் வீற்றிருப்போன்—பதமவைகள் தான்றூங்கி
" உயிர்நிலையே என்நாதா !—உன்றன்மேல் என் பிரேமை
ஒருநாளுமோயாது—ஓர்ந்திருப்பீராங்கதுவும்."
இக்கால் தவிசரசன்—எளியோன் முகநோக்கி
" பார்த்தனையா ? கேட்டனையா ?—பழுத்த ஒரு பைத்தியமே !
அகம்பாவன் யாரரைவாய் !—அறிவற்ற முண்டமே நீ !
பெருத்ததொரு சதிகாரன்—பேசிவாராய் என்முன்பு
உன்னுயிர்தானுடன் முடிக்க—உற்றதொரு தடையெங்கே ?
இரக்கமென்றோர் அருங்குணமாம் !—இணையற்ற பெருங்குண
அழகிய ஓர் பூஷணமாம் !—அவ்விரக்கமென்னுளத்தில் [மாம் !
ஊற்றுப்பெருக்கதுவாய்—உயர்வழிந்து பெருகுதலால்
நின்றேகம் என் திருமுன்—நீ கடத்தி நின்செயலை
மன்னித்தருள்கவெனமன்றுடி வேண்டிட்டால்
நானிங்கே அகம்பாவன்—நீயுமிங்கே கீழ்மகனென்
றெத்துக்கொள் ஒத்துக்கொள் !—உயிர்பிச்சையானளிப்பேன்.
இது கேட்டு அகம்பாவன்—இருகன்னம் தான்சிவக்க
நம்பிக்கையிழந்ததொரு—நகையதுவும் நகைத்திட்டு
" உயர் தவிசில் வீற்றுள்ள—உயர்ந்ததிரு சீமானே !
பொய்யுரை நீர் உரைக்கின்றீர்—பொருந்தாது ! பொருந்தாது !
வாழையடி வாழையதாய்—வந்துள்ளேன் யான்றானும்
அகம்பாவன் அரசகுலம்—ஆங்கதை நீர் அறிந்திடுவீர் !
என்னுயிர்தான் நீர்முடிக்க—எண்ணிவிட்டால் செய்திடுவீர் !
மானமது அழிந்ததற்பின்—வாழ்ந்திடவுமெண்ணுகில்லேன் "
இவ்வாறு அகம்பாவன்—இரங்கலோடுரைக்கையிலே
தவிசரசன் அவன்றானும்—தனித்திவனை பார்த்திருந்தான்
மோனமது கொண்டவன்றன்—முகத்தினிலே புன்னகைதான்
எழில்பெற்று ஓங்கிவர—ஏந்தலவன் அருள்கின்றான்
" ஆண்மைத்தனிவஸ்து—ஆங்குன்னுள் அரும்புதலால்
நீ பிழைத்தாய் ! நீ பிழைத்தாய் !—நின்னுயிரை யானளித்தேன்
மனம்போன போக்கதிலே—மற்றங்கே உழலாமல்
ஔவைக் கிழவியவள்—அவளுரையைப் போற்றிவளர்
போற்றியும் நீ வந்தாக்கால்—பூவுலகில் பதம்பெருவாய் "

தன் மனைதனில் தான் தத்துவமுணர்தல்.

பொற்றவிசு தனிலிருந்து—பொன்னான இவ்வார்த்தை
புகன்றுவர அகம்பாவன்—பொன்முகமே நோக்கிநின்றான்
தன்னதொரு தர்பாரில்—தானிருக்கத் தனையறிந்து
தாழ்ந்தங்கே போற்றிடுவோர்—தன்னை இப்போழ்தறியார்போல்

அமர்ந்தங்கே இருந்தவரும்—அகம்பாவன்றனை நோக்கார்!
தேசுமிகு பொற்றவிசில்—தெய்வமது தவிசிருக்க
அகம்பாவன் போன்றதொரு—அறிவிலியை நோக்குவரோ?
இப்போழ்தவனுளத்தில்—எழுந்ததங்கோர் தத்துவமும்

அநுபவத்தால்தானறிந்தான்—அரண்மனையாம் தன்மனையில்!
“கல்லானே ஆயிடினும்—கைப்பொருளொன்றுண்டானால்
எல்லோரும் முன்வந்து—ஏற்றி மற்றும்போற்றி நிற்பர்!
இல்லானவன்றனையும்—இல்லாளும் வேண்டியிடாள்!

பெற்றெடுத்த தாயவளும்—பின்னுமிவன்றான் விரும்பாள்!
செல்வமது சீருடனே—சிறகெடுத்து ஓடிநின்றால்
செல்வம் படைத்தவன்றன்—செல்வாக்கு ஓங்கிநிற்கும்! [வாக்கு
(அவன்) வாயிருந்து வருஞ் சொற்கள்—வாய்க்குமொரு பெரு

செல்வமது இல்லாது—சிறுமையுற்றோன் பெருவாக்கும்
செல்லாது! செல்லாது!—செய்வதங்கே பின்னென்ன?
செல்வமது இல்லார்க்கு—செகமது தானில்லை! இல்லை!
அருளிலார் தாம் தமக்கும்—அவ்வுலகமில்லை இல்லை!’.

என்பனபோல் சாசனங்கள்—எழுதியுள்ளார் மேலோர்கள்
ஆங்கவையும் என்பாலே—அநுபவத்தில் பலித்துளன
நேற்றங்கே வேட்டைக்கு—நேர்மையுடன் யான் சென்றேன்
அதுவரையும் மற்றிங்கே—அதிர்ச்சியுடன் ஒடுங்கி நின்றார்!

ஏழையுமாய் பஞ்சையுமாய்—இன்றிங்கே யானிருக்க
ஏரெடுத்தும் பார்க்க இலை—என் மனிதர்தானுமிங்கே!
தத்துவமீதறிந்தேன்—தரணியதன் நிலையுணர்ந்தேன்!”
இவ்வுண்மை இனிதுணர்ந்து—இவனிருந்தானாயிடினும்

அதுபோது அமிழ்ந்திருந்த—அதிகோர குரோதமது
தன்னண்பர் நால்வருடன்—தானவனை வருத்திடவும்
தவிசரசன் பகைமுடிக்க—தான் பாய்ந்துஓடலுற்றான்!
இவன் பாய்ந்துஓடலுமே—இவன் வளர்த்த சுணங்கனது

முன்வந்திவன்குரைத்து—மூர்க்கமுடன் பாய்ந்திடவும்
அடுத்தங்கே நின்றதொரு—அழகிய ஓர் காவலரும்
சுணங்கனதை அடக்கிட்டு—சூழ்ந்திவனை எல்லோரும்
பிடரிதனைத் தாம்பிடித்து—பின்பவனை வெளிக்கொணர்ந்து

வீதிகள்தோறுமவனை—விதவிதமாய் நடத்திவிட்டு
கோட்டை வெளிக்கொணர்ந்து-கொடுமையதாய்தள்ளிவிட்டார்.

குரு தரிசனம்.

தள்ளிவிட மற்றிவனும்—தரைமண்ணைத்தான் கௌவி
சிரமமவன் மிகக்கொண்டு—சிந்தையுந்தான் மிகநொந்து
தானெழுந்து தன்வழியே—தானவனுந்தனிநடந்தான்.
தெருத்தெருவாய்த்தானலைந்து—தெளிவழிந்து மற்றவனும்

பிறபிறஇடம்பலவும்—பித்தனவன் திரிந்துழல
உச்சியொருபோழ்தங்கே—ஓருவிக்கரையதன்மேல்
பர்னகசாலையொன்று—பார்த்திடவுமப்போழ்து
உவகையது மிகப்பூக்க—உடனதன்கட்சென்றிடவும்

உன்னியிட்டான் உன்னியிட்டான்—உதயமிவன் நற்காலம்!
பர்னகசாலையதில்—பழுத்த பெரும் யோகியவர்
தந்நிலையைத் தான் கண்டு—தனிச்சுவையும் சுவைத்துவரார்
தெய்வச் சுவையதனை—தெளிந்தங்கே பருகிவரார்

அரசனிவன் அகம்பாவன்—அவன் குலத்திற்காதி முதல்
பெரிய திருகுருவாவார்—பேணிநின்றால் பதம் பெறலாம்.
குருவென்று கூறிடிலோ—குவலயத்தில் நாத்திகரும்
குறும்பு பல மிகப்பேசி—குவலயத்தை கலக்கிவரார்

தாம்பேசும் குறும்பதற்கும்—தனித்து மங்கே குருவிருக்க
மற்றுமவர் மறந்திருக்கார்—மடைமையினுல்! மடைமையினுல்!
குருவென்று கூறிடிலோ—குவலயத்தில் ஆத்திகரும்
ஏற்றங்கே போற்றிவரும்—இயற்பொருளை கூறுதுங்கேள்
தந்தை தாய் இங்கவன் (குரு) காண்-சார்கதி மற்றிங்கவன்காண்.
அந்தமில்லா இன்பமுந்தான்—அளித்திட ஓர் வல்லவன்காண்
நம்முள் உயிர் அவன் காண்—நாம் நாடச் சரணவன்காண்
அருள் சுரக்கும் அழகனவன்—ஆண்மை நிரைகோனவன்காண்.
முன்னங்கே அகம்பாவன்—முடிகொண்ட நாள் வரையும்
நன்னயமாய்த் தன்குருவை—நலம்பெறவே போற்றிருந்தான்
தான்செய்த வினை யெதற்கும்—தன் குருவைக் கேட்டுவந்தான்
குருவவரின் கடாட்சமதால்—குவலயத்திலிவன் பெருமை
பெருகிவரப் பெருகிவரப்—பெரிதவரை மறந்திட்டான்
மறந்திட்ட சாபமதோ?—மற்றுமிங்கும் அகம்பாவன்
இந்நிலையில் இருந்துவரான்—இதுவுமொரு அத்தாட்சி.
குடிலதனைப் பார்த்திடவும்—குணமெலிந்த ஏழையிவன்
குரு அவர் தம் தெரிசினமும்—குறிக்கொண்டானிவ்வேளை
அவர் திருமுன் தான் செல்ல—ஆசையுற்ருனுயிடினும்
'எனையுமவர் அறிவாரோ'—என்றதொரு ஐயமுற்ருன்.
இனிக்குமொரு துறவியவர்—எப்படித்தானுயிடினும்
அன்புடனே ஆகாரம்—ஆதரவாய்த் தானளிப்பார்
இருக்க இடமுமங்கே—இன்பமுடன் தானளிப்பார்
என்றிவ்வாறவனெண்ணி—ஏகியுடன் குடில் நோக்கி
கதவதனை மெதுவுடனே—கையதனுல் தட்டிநிற்க
உள்ளிருந்து யோகியரும்—உடன் வந்தார் வெளியங்கே
வந்த இவன் முகந்தேகம்—வாட்டமதைத் தானறிந்து
இவனுமொரு இரந்துண்பான்—இவன்றனக்கு மற்றங்கே
யாதுற்றதெனக்கேட்க—மற்றிவனுஞ் சொல்லுகிருன்
"என்னிடையில் ஆடையில்லை—என்மெய்யில் பலகாயம்
எளக்காரமாயிடினும்—என்றும் யான் உமதடிமை
அகம்பாவன் யானுவேன்—அதை உரைத்தேனிப்போதே",
என்னிடமும் உதவியெதும்—இரந்தங்கே கேட்டிட்டால்'

உடனே அவை அளிப்பேன்—உயர்கதைகள் வளர்க்காதே
குடிலதனுள் நீ புகுந்து—குறித்த அந்த தனிஇடத்தில்
தேகமதைக் கடத்திட்டு—தெய்வமது தொழுதிடுவாய்
பாவம் பலவிளைக்கும்—பைசாசம் அகந்தையது
பரிந்தோடச் செய்யவென்று—பக்தியுடன் பிரார்த்திப்பாய்"
உலகதனில் தான்வந்த—ஒருபெருநாள் அதுமுதலாய்
இன்றுவரையிலவன்—இத்தொண்டு செய்தறியான்
பதமலரை ஒருக்கணமும்—பாவித்து அறியான்காண்
இவ்விதம் தன் மெய்வளர்த்த—இடும்பாவ அரசனிவன்
தலைவணங்காதிதுவரையும்—தானிங்கே இருந்திருக்க
அஷ்டாங்க தண்டமதும்—அவன் செய்து நின்றதனை
தானினைந்து தானினைந்து—தனிவிம்மல் தான்கொண்டான்.
விம்மியவனழுது—விதவிதமாய் வேண்டுகிறான்
"எள்ளதனில் எண்ணெயைப்போல்—எங்கும் நிரைபூரணனே
எளியேன் முழுமூடன்—என்றனையுங் கார்த்திருக்காய்
திக்கற்ற தீனனெனை—தினப்பொழுதுங் கார்க்கவேணும்
யான்செய்த பாவமதால்—யானிளைத்து வாடுகிறேன்
கண்ணியமாய் வாழ்க்கைதனை—கடந்திடவுமருள் சுரப்பீர்
பாண்டமது தான்வனைய—பாங்கான களியதுபோல்
உன்னிலையை யானெய்த—ஒத்ததொரு களியாவேன்
இப்பெருத்த உண்மையினை—இப்பொழுதே யானுணர்ந்தேன்.
"பஞ்சாய்ப் பறக்கு நெஞ்சப்—பாவியை நீ கூவியையா
அஞ்சாதே யென்றின்—றருள் செயவும் வேணுமையா"
மனமதுதான் நெக்குருக—மற்றவன்றன் மெய்விதிர்ப்ப
கண்ணீர் கம்பலையுடனே—கைகுவித்துத் தொழுது நின்ற
அகம்பாவனவன்றன்னை—அருள்யோகி கடாட்சித்து
நம்பகந்தான் அவன் கொள்ள—நல்வார்த்தை கூறுகின்றார்.
"அரியதொரு திருத்தவசில்—ஆட்சியது செய்து வந்து
அலங்கோலமாக நிற்கும்—அகம்பாவனீயலனோ?
அலதென்முன் நினைப்பார்த்தல்—ஆங்கதுவென் கனவதுவோ?"
பாலையது வனமதிலே—பறக்குமொரு பாவியவன்
நீர் நிழல் தானிடையங்கே—நின்றுவரப் பார்த்திடவும்

கொண்டிடுவான் இன்பமது—கூறலதும் எளிதன்று
அவ்வின்பந்தனையுணர்ந்த—அவனொருவன்றான் நுகர்ந்தான்.
அவன் நுகர்ச்சியுற்றதையும்—அவன் முகமே சான்றுரைக்கும்
ஆங்கிந்த உண்மையைப்போல்—அகம்பாவனடலரசன்
முந்திய நாள் காலையிலே—முனைந்தவன்றான் வேட்டைக்கு
தன் புரவி தானேறி—தான் தனித்து முன்னேகி
அருவியதில் நீராட—அவனிழிந்து மேலெழுந்து
ஆடைமுதலாபரணம்—அத்தனையும் பறிகொடுத்த
வேளையது தான் முதலாய்—விதவிதமாய் தானடைந்த
உடல் மனங்கள் வேதனைகள்—ஓங்கோங்கி வளர்ந்துவர
தான்போன இடமெங்கும்—தான் பார்த்த எவ்வெவரும்
தன்னிடமும் தயவின்றி—தாட்சண்யம் சிறிதின்றி
அன்பில்லா வார்த்தைகளால்—அவன்றனையும் தூற்றிநின்றார்
தான் சென்ற இடமெல்லாம்—தான் பழிக்கப் பெற்றிருந்தான்
இவன்றனையு மறிந்தவராய்—எவருமெங்குமில்லை இல்லை
ஈங்கவன்றன் குருநாதன்—இவனறிந்து இவன்றனக்கு
கடவுளவர் தொழுதிடென—கட்டளை தானிட்டிடவும்
இரக்கமது கொண்டவரும்—இவனுடனே பேசிடவும்
உள்ளம் நனிகுளிர—உவகை மிகப்பூத்திடவும்
அவரிருதாள் சென்னிவைத்து—அறிவுடனே உரைக்கின்றான்
"என்நாதா என்நாதா—என்னதருட் குருநாதா
எளியன் யான் ஈங்கென்னை—ஏந்தலுந் தாமறிந்திட்டீர்
ஈங்கேயிப்பேருலகில்—இனியெனக்குக் குறையில்லை
ஆங்குமவன் பதந்தொழுவேன்—அதற்கும் ஐயமில்லை! இல்லை!
பசிதீர சிறுவுணவும்—பட்சமுடனீந்திடுவீர்
இடைமூட ஆடையொன்றும்—இட்டமுடன் தந்தருள்வீர்
அகங்காரம் அகலவொரு—ஆசியதும் செய்தருள்வீர்
இத்தனையும் யான்பெற்று—என் மனையும் புகுந்தாக்கால்
உச்சிதமாய் என்னுரிமை—உடனங்கடைந்திடுவேன்."
மானிடப்பிறவியதன்—மர்மமதைத் தானுணர்ந்த
அகம்பாவனவன்றானும்—அறிவுவந்த உவகையுடன்
கண்களிலே பாஷ்பமது—கடுவூற்றெடுத்து நிற்க

கடந்தபெரு யோகியவர்—கடாட்சித்துக் கடாட்சித்துக்
கேட்டவவை தானருளி—கேட்டதொரு வரமளித்தார்
இதற்குள்ளே நாழிகையும்—ஈரிரண்டு ஆகிடவும்
முறட்டாடை கட்டியவன்—முன்சென்றான் (தன்) மனைநோக்கி.
மனைநோக்கி ஏகிடவும்—மனையதனின் பெருந்துவாரம்
மூடாமல் திறந்திருக்க—முனைந்திவனுமுட்புகுந்தான்
உட்புகுமோர் வேளையிலே—ஒதுங்கி நின்றார் காவலரும்
வழிவிலகி நின்றதல்லால்—வணக்கமவர் செய்யவில்லை
வணக்கமது செய்யாது—வழிவிலகி மட்டும் நின்ற
காவலவர் பேசி நின்றார்—கசபிசென அவர்தமக்குள்
“வந்தவரும் யெவர் தெரிவீர்—வன்மிக்கக் கொற்றவன்காண்
வேடமுடன் வருவதுவாய்—விளம்புரைத்துக் காலையிலே
வணக்கமொன்றும் வேண்டாமென்—றவராணை யிட்டுள்ளார்”
குசுகுசென இவர்பேச்சை—குறிப்பாகத் தானுணர்ந்து
புன்னகைமேற்கொண்டவனும்—புகுந்துள்ளே போந்திட்டான்
உள்நுழைவாய் இவன்கடக்க—உடனங்கே ஓர்சீமான்
வள்ளலிவன் யெதிர்கொண்டு—வணக்கமுடன்றுகனுகி
“ஏந்தலுந்தன் ஆஞ்ஞைக்கு—எதிர்நோக்கி எழிலரசி
மந்திராலோசனை யறையில்—மாட்சிமையாய் காத்திருக்காள்”
நல்லதொரு உரைகேட்டு—நல்லதென்று மன்னவனும்
முன்னவன்றான் வழிவிலக்க—பின்தொடர்ந்து இவன்நகர்ந்தான்
தன்னுரிமை தானடையும்—தனித்தஇந்த வேளையதை
தான்நோக்கத் தான்நோக்க—தனதையம் தீர்ந்திட்டான்
ஐயமது தீர்ந்தவனும்—ஆங்கிருந்தா னாயிடினும்
(முன்)தவிசதனில் தன்மாற்றான்—தானிருக்கத் தான்கண்டு
தானடைந்த இன்னலதை—தானினைந்து தானிருந்தான்
அதன்மர்மம் தானதையும்—ஆங்கவனும் அறிந்தில்லை
தடையங்கு மொன்றின்றி—தன்மனையுள் தான்புகுந்து
மந்திரசபை யதன்முன்—மற்றுமிவன் நிற்கையிலே
தன்வருகை யெதிர்நோக்கி—தான்காத்து நிற்பவள்போல்
சித்திரப் பதுமையென—சீறரசி வீற்றிருக்க
ஆங்கவள்தன் பக்கமதில்—அந்தஒரு மாற்றானும்

உடனிருக்கக் காண்டலுமே உண்டிட்டான் கோபவனல்
கோபக் கனலதுவும் கொற்றவன்றன் கண்மறைக்க
முன்னவனும் ஓடியங்கே—முனிவுரையும் கூறுமுன்னே
தவிசதனில் தானிருந்த—தனித்தவொரு பேருருவம்
தான்மறைய மற்றங்கோர்—தனிச்சோதி தோன்றிற்று
மாதரசி மந்திரசபை—மற்றுமங் கெவருமில்லை
மண்ணரசி மாற்றானோடு—மற்றுமிவன் றன்மூவர்
மூவர்மட்டுமாங்கிருக்க—முன்னெழுந்த ஒருஜோதி
அகம்பாவன் தான்மட்டும்—ஆங்கதனைத் தான்பார்த்தான்
குறித்தஇவன் ராணியவள்—குந்திமட்டும் தானிருந்தாள்
அவளறியாள் உருமறைந்து—அழகெழுந்த ஜோதியதை
தோன்றியவோர் ஜோதியதும்—தொடர்ந்தங்கே படர்ந்துவர
படிப்படியாய் அதுதிரண்டு—பளிங்கொளி யொன்றாயிற்றே
உருண்டு திரண்டுமது—உயர்கிரணந் தான்வீசி
கதிர்களவை வீசியிடும்—கதிரவன்போல் நின்றதுவே
அவணின்ற ஜோதியதன்—அதன்பெருமை தானுரைக்க
எச்சோதியென உரைப்போம்—இயம்பிடவும் எளிதோ!
கஜமுகனுங் கணபதியின்—கதித்தெழுந்த ஜோதியதோ!
கலைவளர்ப்பாள் தாயவளாம்—கலைமகள் தன் ஜோதியதோ!
சத்தியவள் தானளித்த—சத்திவேல் ஜோதியதோ!
தேவகிதான் தெரிசிக்க—சிறையெழுந்த ஜோதியதோ!
இருஞ்செல்வம் தானளிக்கும்—இலக்குமிதன் ஜோதியதோ!
மாலயன்றான் கண்டிடவும்—மன்றம் நின்றஜோதியதோ!
சங்கடங்கள் சங்கரிப்பாள்—சங்கரி தன் ஜோதியதோ !
இவரெவர்க்கும் தாயகமாம்—இயற்கடவுள் ஜோதியதோ!
ஜோதியது ஜ்வலித்திருக்க—ஜோதியதன் தனிலிருந்து
ஒலியொன்றும் ஜில்லெனவே—ஒலித்துமங்கே நின்றதுவே !
ஒலிதனிலுமிருந்து அங்கே—ஓர் வாக்குந்தோன்றிற்று !
“போகாதே! போகாதே !—மோசமிங்கு போகாதே
மண்ணுலகமாக்களுள்ளே—மன்னவனுமோர் தேகி
உலகமது சிருட்டிகளை—ஒரு கணமும் பிரியாது
உடனிருந்து காத்துவரும்—ஓர் பொருளாம் யாம் அறிவாய்

உந்தனுடன் யாமிருந்து—உன்னையுந்தான் காத்திருக்க
அதையுணரா திருந்திட்டாய்-அதுமுறையோ ! அதுமுறையோ!
உன் திருவும் உன் வலியும் —உயராசனெனப் பெயரும்
உனக்குமிங்கே அளித்திருக்கும்—உயர்ந்தொரு சக்தியுண்டு
அச்சக்தி தனையுணரா—தவதிமிக நீ பட்டாய்
உன்னுருவும் உன் முகமும்—ஒன்றுமங்கே மாருதே
உயராசனுகியங்கே—உலகமதிலிருக்கையிலே
ஓங்காரமாம் ! சக்தி—ஒருநாட் பொழுதினிலே
எவ்வாறு வாட்டியுனை—எந்நிலையில் வைத்ததென்ற
உண்மையதும் நீ தெரிந்தாய்—உவகையதால் யாமிங்கே
வேண்டுவான் நின்றனுக்கு—வேண்டி நிற்கு முன்னரசு
ஈந்திட்டோமீந்திட்டோம் !—ஈங்கதனை யேந்திடுவாய் !
ஆண்டவன்ருன் உள்ளமைத்து—ஆண்டிடுவாய் பொன்னரசும்
இனிய இந்த வாக்கருளி—இனியதொரு ஜோதியதும்
வாசற்படி நோக்கி—வன்கதியைத் தான் செலுத்தி
மின்னலதுபோலதுவும்—மின்னெனவு மறைந்ததங்கே
அகம்பாவன் காட்சிவிட்டு—அப்டால் மறைந்ததுவே
இவ்வாறு ஜோதியதும்—இல்லாது மறைந்திடவும்
அரசன கம்பாவன்—அகங்குழைந்து புல்ம்புகிருன்
"கன்மநெறி தப்பிற்—கடுநரகென றென்னூளும்
நன்மைதரு ஞானநெறி—நமக்களித்துப் பெருஞ்ஜோதி
மற்றதுவும மறைந்துவிட்ட—மாயமதும் யானறியேன்
எப்போ இனிகாண்பேன்—என்றனுக்கும் வாய்த்திடுமோ
எவ்வடிவும் பூரணமாம்—எந்தையுரு வென்றிசைந்த
அவ்வடிவுக் குள்ளேயான்—அடங்கிடவும் வாய்த்திடுமோ
அவ்வுயிர்போல் எவ்வுயிரும்—ஆனபிரான தன்னடிமை
எவ்வுயிரு மென்றுபணி—யான்செய்ய வாய்த்திடுமோ
மாசற்ற வன்பர்நெஞ்சே—மாருத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின்—தேசுதனைக் காண்பேனே
தன்னரசு நாடாஞ்—ஜடசால பூமியிசை
என்னரசே என்னை—இறையாக நாட்டினையே
காலால் வழிதடவுங்—காலத்தே கண்முளைத்தாற்

போலேஎன தறிவிற்—போந்தறிவாய் நிற்பாய்நீ
இவ்வா றகம்பாவன்—இர்ங்கிநின்ற வேளேயிலே
ஜோதிமறைந் ததுவால்—சோகமிகக் கொண்டிட்டான்
பெருமூச் செறிகின்றான்—பேதையவன் பிரமித்திடவும்
பக்கத்தில் பதுமையைப்போல்—பண்புடனே வீற்றிருந்த
அன்னநடை யரசியவள்—ஆங்கறியாள் அதிசயங்கள்
கண்களவை கசக்கிட்டு—கடுந்துயில்தான் நீத்தாள்போல்
இருக்கைவிட்டுத் தானெழுந்து—எழில்சோம்பல் முறித்திட்டு
முன்னங்கே பிரேமையினால்—மூர்ச்சையுட னெதிர்நின்ற
அழகனவன் அகம்பாவன்—அவன்கரமும் தான்பிடித்து
“மன்னாதி மன்னவனே—மகிபர்தொழுஞ் சீமானே
நாழிகையு மாகிறது—நல்விருந்தும் காத்திருப்பர்
அறுசுவையோ டுண்டியது—அவர்களுடன் தாமருந்த
போஜன சாலேக்குப்—போயிடுவோம் வாருமென்றாள்”
இந்தவொரு இனியஉரை—இயற்பகையுந் தான்கேட்டு
பெருஞ்ஜோதி தனிலவன்றன்—பெருஞ்சிந்தை நின்றதனால்
ஆகட்டு மென்றுமட்டும்—அவனியம்பி மற்றவனும்
உடைஉடுக்கும் சாலேயினுள்—உடனவனும் நுழைந்திட்டு
இறைவனிவன் இவனுடையும்—இவனங்கே உடுத்திட்டு
போஜன சாலேயினுள்—புகுந்திடவும் மற்றங்கே
அமர்ந்திருந்த அமைச்சர் முதல்—அவரவர்தம் இருக்கைவிட்டு
எழுந்திருந்து தலேவணங்கி—ஏந்தல்தனைப் போற்றி நின்றார்
வரவேற்றுப் பல்லாண்டு—வகைவகையாய் தான் படித்தார்
அன்றரசன் வேட்டைக்கு—அடவிக்குச் சென்றங்கே
அவன் தனித்துப்போனதொரு—அந்நிமிடம் முதலிங்கே
அழகுக் கடவுளுந்தான்—அவனுருவம் தான் தரித்து
அரண்மனேயில் தங்கி அங்கே—ஆட்சியுந்தான் செலுத்தினதால்
ஒருநாட் பொழுதினிலே—உயர்ந்த திரு அகம்பாவன்
தன்னந்தனியவனாய்—தனித்தவித்த வரலாறும்
எவ்வாறு ஆயிற்றென்—றெவருமங்கு அறிந்திலலே
விருந்தும் விருந்தினரோடு—விருப்புடனே அவன் உண்டான்
இப்பாலகம்பாவன்—எழிலரசு தான் செய்து

வெகுகாலமிருந்துவர—வெகுண்டவன்றன் நாமமதில்
தந்நாமம் தனைமாற்றி—தனி அறிக்கை தான் விடுத்தான்
"பட்டறிந்தோன்" என நாமம்-பண்புடனே தான் பூண்டான்.
இந்நாமம் பூண்டவனும்—இனிமையதாய் ஆட்சியதை
அறம் வளரத்தான் நடத்தி—ஆண்டவன்றன் திருவடியில்
தன் சிந்தை தான் செலுத்தித்—தரணிதனை ஆண்டுவர
இருமுப்பான் நேரத்தில்—இவனுற்ற நிலையதனை
அவனுள் அவன் நினைந்து—அனவரதம் தான் வளர்த்தான்
ஆண்டவன்றன் படைப்பதிலே—ஆங்குமுறும் தேகிகட்கு
அவர் தேகம் மறைந்துவிடும்—அக்காலமுண்டுண்டு
அகம்பாவன் என நாமம்—ஆதியிலே அவன் படைத்து
இவ்வுண்மை அவன் மறந்து—இவன் வாழ்க்கை நடத்திட்டான்
பட்டறிந்தோன் என நாமம்—படைக்க ஒரு காரணமாய்
இவனுற்ற அநுபவத்தால்—இவ்வுண்மை தானுணர்ந்தான்
உண்மையிதை எதிர்நோக்கி—உயர் மன்னனவனிருக்க
அந்திய காலமதும்—அவன் நெருங்கி வந்திடவும்,
உயிர்முடிக்க வல்ல அந்த—ஓரகந்தை ஆங்கதனல்
நாளொன்றில் தான் தவித்த—நல்லதொரு வரலாற்றை
விஸ்தார மாகஅதை—விறன்மிண்டர் அறிந்திடவே
நல்லதொரு சபைகூட்டி—நடந்ததையும் நவின்றிட்டு
வாழையடி வாழையதாய்—வரவிருக்கும் சந்ததிகள்
'அகம்பாவம்' அதன்விஷத்தை—அறிந்திடவோர் சாதனமாய்
உலகுள்ளோர் மற்றவரும்—உணர்வுடனே வாழ்க்கையதை
நீரிற்குமிழி என்றும்—நிலையுற்ற தன்றென்றுஞ்
சாலநினைந் துமவர்—சார்ந்துள்ள பரம்பொருளை
நாடும்படிக் கவனும்—நல்லதொரு சாசனத்தை
பொற்றகட்டில் தான்வெட்டி—பொன்னவன்றன் ராச்சியத்தில்
அரண்மனையாம் வாயருகில்—ஆங்கதையும் நாட்டிட்டான்
நாட்டியதன் நாட்டத்தை—நடமாடும் பதந்தோய்த்து
பொன்னவனும் பொன்னுலகம்—பொழிலுடனே புகுந்திட்டான்
அழிவுடலைத் தான் விடுத்து—அழகுயிர் தான் அகலுகையில்
அவ்வுயிர்க்கு உயிரான—அரன்பாதம் போற்றுகின்றான்

வாழ்வனைத்து மயக்கமெனத் தேர்ந்தேன் றேர்ந்த
வாறேநானப்பா லோர்வழி பாராமற்
ருழ்வுபெற் றிங்கிருந்தே னீதென்மாயந்
தடையுற்ருன் மேற்கதியுந் தடையதாமே
யூழ்வலியோ வல்லதுன்றன் றிருக்கூத்தோவிங்
கொருதமியேன் மேற்குறையோ வுணர்த்தாயின்னம்
பாழவதிப் படவெனக்கு முடியாதெல்லாம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசினனே.

ஏதமற்றவர்க் கின்பமேபொழி கின்றவிறையே
பாதகக்கருங் கன்மனங்கோ யிலாப்பரிந்து
சூதகத்தன யாதினுமிச்சை மேற்ருேன்றும்
வாதனைக்கிடமாயி னேனெவ்வணம் வாழ்வேன்.

ஞானநெறிக் கேற்றகுரு நண்ணரிய சித்திமுத்தி
தானந்தருமந் தழைத்தகுரு—மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு வென்சிந்தை
கோயிலென வாழுங்குரு.

வையகமாதர் சுகத்தையும்—பொன்னையும் மாயைமல
மெய்யையு மெய்யென்று—நின்னடியார் தம் விவேகத்தையு
மையமில் வீட்டையு மெய்ந்நூலையும் பொய்யதாக வெண்ணும்
பொய்யர் தந்நட்பை விடுவதென்ருே பரிபூரணனே!

கருணைமொழி சிறிதில்லேனீதலில்லேன்
கண்ணீர் கம்பலையென்றன் கருத்துக்கேற்க
வொருபொழுதும் பெற்றறியேனென்னையாளு
மொருவா வுன்னடிமை நானொருத்தனுக்கோ
விருவினையு முக்குணமுங் கரண நான்கு
மிடர்செயு மைம்புலனுங் காமாதியாறும்
வரவரவுமேழைக்கோ ரெட்டதான
மதத்தொடும் வந்தெதிர்த்த நவவடிவமன்றே.

கற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கெனவே
சுற்றும் தொழில் கற்றுச் சிற்றின்பத்தூடு சுழலினென்னுங்
குற்றங் குறைந்து குணமேவிடு மன்பர் கூட்டத்தையே
முற்றுந் துணையென நம்பக்கண்டாய் சுத்த மூடநெஞ்சே

உமைதுதி.

மிடியிட்ட வாழ்க்கையா லுப்பிட்ட கலமெனவு
மெய்யெலா முள்ளுடைந்து
வீறிட்ட செல்வர் தந்தலைவாயில் வாசமாய்
வேதனைகளுற வேதனுந்
துடியிட்ட வெவ்வினையை யேவினன் பாவி நான்
றொடரிட்ட தொழில்களெல்லாந்
துண்டிட்ட சாண்கும்பியின் பொருட்டாயதுன்
றொண்டர் பணி செய்வதென்றோ
வடியிட்ட செந்தமிழி னருமை யிட்டாரூரி
லரிவையோர் பரவை வாயி
லம்மட்டு மடியிட்டு நடை நடைந்தருளடிக
ளடியீது முடியீதென
வடியிட்ட மறை பேச பச்சிளங் கிள்ளையே
வளமருவு தேவையரசே
வரைராஜனுக் கிருகண்மணியா யுதித்த மலை
வளர் காதலிப் பெண்ணுமையே —

ஓம் தத்ஸத்.

ஆத்மானந்த நிலயம், தஞ்சை.

வேதாந்த நூல்.

1.	ஸ்ரீ பஞ்சதசி (பஞ்சதசப்பிரகரணம்) வாலியூம் 1 & 2	...9—0—0
2.	* ஸ்ரீ விருத்திப்பிரபாகரம்	...5—0—0
3.	* ஸ்ரீ விசாரசாகரம்	...3—4—0
4.	ஸ்ரீ விசாரசந்திரோதயம் (4-ம் பதிப்பு) ...	...1—8—0
5.	ஸ்ரீ பாலபோதம்	...1—8—0
6.	ஸ்ரீ விருத்திரத்நாவலி	...0-12—0
7.	நாநாஜீவவாதக்கட்டளை குறிப்புரையுடன் (2-ம் பதிப்பு)	0—4—0
8.	மேற்படி (செய்யுள்) ...	...0—3—0
9.	விவேகசிந்தாமணி (வேதாந்த பரிச்சேதம்) ...	...0—6—0
10.	ஸ்ரீ சங்கரநீலகண்டாசார்ய சம்வாதம் ...	...0—6—0
11.	ஹடயோகப்பிரதீபிகை	...2—0—0
12.	ஸ்ரீ சிவயோகப்பிரதீபிகை	...0-10—0
13.	அட்டாங்கயோகசூத்திரம்	...1—0—0
14.	நாரதபக்தி சூத்திரம்	...1—8—0
15.	ஆத்மபோதமும் தத்துவபோதமும் (2-ம் பதிப்பு) ச. கி.	0—8—0
16.	ஸ்ரீபஞ்சீகரணமுதலியன 27புத்தகங்கள் ச.கி. 3ம் புத்தகம்	1—0—0
17.	ஸ்ரீ குருபுஜங்கஸ்தோத்திரம் ஷை 4-ம் ஷை	0—4—0
18.	பிரச்நோத்ர ரத்நமாலை ஷை 5-ம் ஷை	0—2—0
19.	தருக்ககௌமுதி (நியாயபதார்த்தத்துடன்) ...	...0-10—0
20.	ஞானவாசிட்ட வசனம் (வைராக்கியப் பிரகரணம்)	...1—4—0
21.	கைவல்யோபநிடதம், அமிர்தபிந்தூபநிடதம், சுகரகசியோபநிடதம், ஸ்கந்தோபநிடதம் (செய்யுள்)	0—5—9
22.	தத்துவமஸிமகாவாக்கியவுபதேசம் (உபநிஷத்) 3ம்பதிப்பு	0—3—0
23.	சுருதிஷட்லிங்கசங்கிரகம்	...0—8—0
24.	ஸ்ரீ நந்திகேசுவரகாசிகை	...0—4—0
25.	உத்தரகீதை கி. கொ. (1-ம் புத்தகம்	...0—6—0
26.	ஸ்ரீ ராமகீதை ஷை (2-ம் புத்தகம்	...0—6—0
27.	குருகீதை ஷை (3-ம் புத்தகம்) 2-ம் பதிப்பு } கலிகோ	...1—4—0
	ராப்பர்	...1—0—0
28.	தேவீகீதை, ஷை (4-ம் புத்தகம்)	...0-12—0

A

ஜடாவல்லவர்	2—8—0
துரதிர்ஷ்ட இந்தியா	2—8—0
இந்தியமாதா	1—8—0
இந்தியபிதா	2—0—0
இல்வாழ்க்கையின் இரகசியங்கள்	2—0—0
காசி அல்லது புண்ணியபூமி	1—4—0
இராஜகோபிசந்த்	0-12—0
தருமசீலன்	1—0—0
வர்த்தக யுக்தி	0-12—0
வர்த்தக கணிதநூல்	2—0—0
குடும்ப விநோதக்கதைகள்	2—0—0
ஜெயவீரசிங்கம்	0—8—0
அகம்பாவன்	0—2—0
ஸ்ரீ வித்தியாகீதை	0—2—0
பக்திநெறி	0—2—0
ராஜசேகரன் அல்லது மூன்று தேச பிரஷ்டர்கள் ...	0—8—0
வீரசிம்ஹன்	0—8—0
ஸ்ரீ ராமதாஸ்	0-12—0
சகுந்தலா அல்லது காதல்வெற்றி	0—8—0
குகானந்த கீர்த்தனைகள்	0—1—0
சத்தியவிரதன்	0—6—0
இரத்திநும்பாள்	1—0—0
உஷா பரிணயம்	0—8—0
ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர்	0—8—0
சுபத்ரார்ஜுநு	0—8—0
கண்ணம்மாள்	0—6—0
சவடால் சம்மந்தம்	1—0—0

அவரவர்கள் மநோபாவத்திற்குத் தக்கவாறு

இன்பமளிக்கும் இனிய புத்தகங்கள்

நம்மிடம் இரண்டணு ஸ்டாம்பு அனுப்பி

இநாமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

நஞ்சன்கூடு பல்பொடி பாக்கெட் ... ... 0—1—0
டிஷ் மெடிகேடட் டின் ... ... 0—4—0

ஸ்ரீகாகஸ்தூரி மாத்திரை.—குழந்தைகளுக்கும், பல திரேக அசௌகர்யங்களுக்கும், ப்ரசவத்திலும், தாம்பூலத்துடனும் உபயோகிக்கக்கூடியது. ... ... பாட்டில் ரூ. 0—4—0

வாதாமிர்தம் என்ற பார்தாமிர்தம். —தலைவலி, சுளுக்கு, ரத்தக் கட்டி, பிடிப்பு, வாய்வு, குத்து, ஜன்னிகளுக்கு இது அவசியமானது. பாட்டில் ரூ. 0—4—0

கோரோஜனை மாத்திரை.— குழந்தைகளின் மலச்சிக்கல் மார்ச்சளி, இருமல், ஜ்வரம், இவைளுக்கு நிகரற்றது பாட்டில் ரூ. 0—6—0

சித்ரதைலம்.—(மூலிகைகள் சேர்ந்த சுத்தமான சிற்றுமணக் கெண்ணை) குழந்தைகளுக்கும், பெரியோருக்கும், கணைச்சூடு. காங்கை, மலச்சிக்கல், மூலம் இவைகளுக்கு சிலாக்கியமானது.
4 அவுன்ஸ் பாட்டில் ரூ. 0—6—0

சவனப்ராசா.—இழுப்பு, இருமல், சிலேஷ்ம உபத்திரவங்கள் திகைப்பு, மார்புவலி, பலஹீனம், கூட்டு நெஞ்சு முதலிய உபத்திரவங்களுக்கும், வயதினர்களுடைய ஜீரண சக்தி குறைவுக்கும், சிறுவர்களுக்கு காட்லிவர் எண்ணெய்க்குப் பதிலாசவும் உபயோகிக்கக்கூடியது. 24 தோலா டப்பா ரூ. 2—0—0

ஜீரக ரஸாயனம்.—மந்தம், அஜீரணபேதி, வயிற்றுவலி, மலச்சிக்கல், வயிற்றுப் பொருமல், அன்னத்துவேஷம முதலியவற்றை கண்டிக்கிறது. 24 தோலா டப்பா ரூ. 1—8—0

ஸாரஸபரில்லா.—மேக விஷநீர் சம்மந்தமாயும், மற்ற காரணங்களாலும் கெட்டுப்போயிருக்கிற இரத்தத்தை சுத்தி செய்து, பலத்தைக் கொடுப்பதற்கான டானிக். 6 அவுன்ஸ் பாட்டில் ரூ. 0—8—0

அமிர்தாமலக தைலம்.—த்ரேகம் அஸ்தி, மூளை காங்கையையும், கண் எரிச்சல், கண்ணீர் பெருக்கம், சிரசு நீர், மயிர் உதிர்தல் முதலியவைகளையும் தணிக்க ஸ்நானத்திற்காக ஏற்பட்டது.
4 அவுன்ஸ் பாட்டில் ரூ. 0—8—0 12 அவுன்ஸ் ரூ. 1—4—0

சங்கவடி.—எல்லாவித வயிற்றுவலிகளுக்கும், கிரஹணீ, பரிணாம சூலை, அஜீரணம், மலச்சிக்கல், அதிகாரங்களுக்கு முக்கியமாய் வேண்டியது. பாட்டில் ரூ. 0—6—0

படை மருந்து.—வெளிப்பிரயோகத்திற்கு மட்டும் ஏற்பட்ட இக் களிம்பினால் வெட்டுக்காயம், பித்தவிரிவு, த்ரேகபபற்று, படைகள், சொறி, கரப்பான் முதலிய சர்ம ரோகங்களைக் கண்டிக்கலாம்
பாட்டில் ரூ. 0—4—0

ஆமோதினி.—டானிக் குணமுடைய இம்மாத்திரையைத் தாகத் திற்காகவும், முக்கியமாக பாடகர்களும், உபாத்தியாயர்களும், பிரசங் கஞ்செய்பவர்களும் தொண்டை வரக்ஷியை நீக்குவதற்காக உபயோகிக் கக்கூடியது. பாலுடன் கலந்து உபயோகிப்பதில் இரத்த விருத்திக்கு அனுகூலமாயிருக்கிறது. 25 மாத்திரை பாக்கெட் ரூ. 0—1—0
ஷை $\frac{1}{4}$ அவுன்ஸ் பாட்டில் ரூ. 0—4—0

குமார்யாசவ—ஸ்திரீகளுடைய சூதக சம்மந்தமான கெடுதல்களை நிவர்த்தி செய்து கர்ப்பாசயத்தை சுத்தப்படுத்தி, கர்ப்பத்தைப் போஷிக்கத்தக்கது. 6 அவுன்ஸ் பாட்டில் ரூ. 1—0—0

ஹிமஸாகா தைலம்.—சிரோ வியாதிகளுக்கும், புத்தி ஸ்வாதீனமற் றிருப்பது, ஞாபகசக்தி குறைவு, கிறு கிறுப்பு, வலிப்புகள், சிரசில் வாயு, நீர்களால் பாரம், வலி, நமச்சல், எரிச்சல், நித்திரை பங்கம், நரம்புத் தளர்ச்சி, நரம்புத் திமிர், கண் எரிச்சல், கண் நீர்பெருக்கம், கண் மங்கல், கரப்பான் நீர் உபாதைகள், கபால உஷ்ணம் முதலியன குணமாகின்றன. 4 அவுன்ஸ் பாட்டில் ரூ 2—0—0

பாதகமி ரசாயனம்— பலஹீனத்திற்கும், தாதுக் குறைவுக்கும், திரேக எரிச்சலுக்கும், சூட்டிற்கும், இந்திரியம் நீத்துப் போவதற்கும் ஏற்றமருந்து. 24 தோலா டப்பி ரூ 3-0-0

அஸ்வகந்த ரஸாயனம்—பலக்குறைவுக்கும் த்ரேக மெலிவுக்கும், உஷ்ணத்திற்கும் இம்மருந்து சிலாக்கியமானது.
24 தோலா டப்பா ரூ 1-8-0,

கண்டாமலக ரஸாயனம்—பித்த சங்கடங்களையும், தலைவலி வாந்தி உமிழ்நீர் அதிகரித்தல், ஏப்பம் முதலியவற்றைக் கண்டிக்கும்.
12 தோலா கண்ணாடி ஜாடி ரூ 0-14-0.

சதாவரி ரசாயனம்—சூதக சம்மந்தமாயுள்ள சகல வியாதிகளை யும், மாதவிடாய்க் காலங்களில் தவறுமலும், கஷ்டமின்றியும், சூதக மிகுதியையும் குறைவையும், சீர்திருத்தும்.
12 தோலா டப்பா ரூ 1-0-0 ஜாடியில் ரூ 1-2-0.